பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 28, வியாழக்கிழமை 12.01.2017 | கதிர் 68

## ஜி.எஸ்.பி. வரிச்சலுகை திரும்பவும் இலங்கைக்கு

கொழும்பு, ஜன.12

இலங்கைக்கு மீண்டும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதற்கு ஐரோப்பிய ஆணைக்குழு நேற்று தீர்மானித்துள்ளது.

மனித உரிமைகள், தொழில் சட்டங்கள், சுற்றாடல் பாதுகாப்பு, நல்லாட்சி ஆகிய விடயங்களின் கீழ் 27 சர்வதேச இணக்கப்பாடு

பக்கம் 20 >>>

# கண்டியில் பறவைக் காய்ச்சல்!

## இலங்கைக்கும் பரவியது ஆட்கொல்லி வைரஸ்

கொழும்பு, ஜன.12

வேகமாகப் பரவி வரும் வைரஸ் ஒற்றினால் கண்டி பொது வைத்தியசாலையின் 69 ஆம் இலக்க வார்ட்டில் கடந்த 48 மணி நேரத்தில் மூவர் உயிரிழந்தமையை அடுத்து, அந்த வார்ட்டை உடனடியாக மூடுவதற்குத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

உயிரிழந்த மூவரில் இருவர் 'எச்.வன்.என்.வன்.'(H1N1) என்ற ஆட்கொல்லி நோய்க்கான வைரஸ் தாக்கத்துக்கு ஆளாகியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக முற்கொண்டுகிடைத்த செய்திகள் தெரிவித்தன.

அவ்வப்போது உலகின் பல நாடுகளைக் கலக்கி பீதியில் ஆழ்த்தி வரும் பறவைக் காய்ச்சல் நோயே இந்த வைரஸ் தாக்கத்தால் ஏற்படுவது எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

வைத்தியசாலையில் மேற்படி 69 ஆம் இலக்க வார்ட்டில் (சிறுநீரக சிகிச்சைப் பிரிவில்) வேகமாகப் பரவும் வைரஸே இந்த மூன்று மரணங்களுக்கும் காரணம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது எனவும் –

உயிரிழந்த நோயாளர்கள் மூவரில் குறைந்தது ஒருவர் 'எச்.வன்.என்.வன்.' வைரஸ் தாக்கத்துக்கு இலக்காகியிருந்தமை தெரியவந்துள்ளது என்றும் –

வைத்தியசாலைப் பணிப்பா

பக்கம் 20 >>>

# சர்வதேச நீதிபதிகளின் பிரசன்னத்தை தடுப்பது அரசுக்கு இயலாத காரியம்

## நிலைமை சிக்கல் என்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஜனவரி 12

**உள்நாட்டில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பான விசாரணையில் சர்வதேச நீதிபதிகளின் பிர சன்னத்தை இலங்கை அரசால் தடுக்க முடியாது என முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

பொரளையிலுள்ள என்.எம். பெரேரா நிலையத்தில் நேற்று ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினர் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு ஜீ.எல்.பீரிஸ் மேலும் கூறியவை வருமாறு :–


தற்போதைய அரசு முன்னெடுத்துச் செல்லும் தூரநோக்கற்ற திட்டத்தால் எமது இராணுவம் பாதிக்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹூசைன் இலங்கைக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டார். அது முழுமையாகப் பக்கச்சார்பான விசாரணை நடவடிக்கையாகும். ஏனெனில் அவ்விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சாட்சி

பக்கம் 20 >>>

## மக்கள் தயார் என்றால் விரைவில் அதிகாரம் மாறும்!

### மைத்திரியை மிரட்டுகின்றார் மஹிந்த



"மக்கள் தயார் என்றால் அதிகாரத்தை விரைவில் பெற்றுக் கொள்ள முடியும்" – என்று தெரிவித்திருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

"முன்னைய அரசாங்கம் சர்வதேச அழுத்தங்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே இரண்டு ஆண்டுகள் முன்கூட்டியே தேர்தலை நடத்தியது. இதன் மூலம் பிரச்சி

பக்கம் 19 >>>

## 27 இல் நுகேகொடையில் 'மாற்றத்தின் ஆரம்பம்!'

### அங்கு முக்கிய முடிவு மஹிந்தர் அறிவிப்பார்?

கொழும்பு, ஜன.12

கூட்டு எதிரணியின் மிக முக்கிய ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றும் பொதுக்கூட்டம் ஒன்றும் எதிர்வரும் 27 ஆம் திகதி கொழும்பு நுகேகொடையில் இடம்பெறவிருக்கின்றது.

'மாற்றத்தின் ஆரம்பம்' என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் இந்த நிகழ்ச்சியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

பக்கம் 19 >>>

## வெளிநாட்டு நீதிபதிகளை ஏற்குமாறு மனித உரிமைகள் அமைப்பு வற்புறுத்து

கொழும்பு, ஜன.12

பொறுப்புக்கூறலுக்கான உள்நாட்டுப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவது உள்ளிட்ட நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான கலந்தாய்வுச் செயலணியின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் இலங்கை அரசைக் கோரியுள்ளது.

உண்மை, நீதி தொடர்பாக இலங்கை மக்களிடையே பரந்துபட்ட ரீதியில் நடத்தப்பட்ட முதலாவது ஆய்வு ஒன்றில் மக்களின் அபிலாசைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அதனை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் நியூயோர்க்கைத் தலைமை

பக்கம் 20 >>>

அளப்பு அருணாசலம்



அப்ப... நாசியையும் வாயையும் துண்டால மூடிக் கொண்டு இனி முகமூடித் திருடர் மாதிரித்தான் நடமாடவேணும் போலை...

## ரவிராஜ் கொலை வழக்குத் தீர்ப்பை ரத்துச் செய்து புதிய விசாரணைக்கு சட்டமா அதிபர் கோரிக்கை

### மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று மனு

கொழும்பு, ஜன.12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்கின் தீர்ப்பை ரத்துச்செய்து விட்டு, வழக்கு விசாரணைகளை மீண்டும் நடத்த வேண்டும் என கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு உத்தரவிடுமாறு கோரி சட்டமா அதிபர் மேன் முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

ஜூரி சபையின் முன் வழக்கை விசாரித்த விசேட மேல் நீதிமன்ற நீதிபதி, வழக்குத் தொடர்பான சட்டரீதியான விடயங்களைப்

பக்கம் 20 >>>


# ஒரு சிலருடன் மட்டும் பேசித் தீர்வு வராது; மீண்டும் அழிவு என எச்சரிக்கிறார் சங்கரி!

கொழும்பு, ஜன.12

"தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் தாமே என்று கூறும் ஒரு சிலருடன் மட்டும் நீங்கள் உறவு வைத்துக் கொண்டு, ஏனையவர்களைப் புறம்தள்ளி நடத்தும் முயற்சியால் தீர்வு கிட்டப் போவதில்லை."

– இப்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுத்தில் தெரியப்படுத்தியிருக்கின்றார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி.

'மீண்டும் ஓர் அழிவை எமது நாடு சந்திக்கப் போகின்றது என்பது மட்டும் உறுதி' என்ற தலைப்பில் நேற்றுப பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தாம் அனுப்பி வைத்த கடிதம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அந்தக் கடிதத்தின் விவரம் வருமாறு:–

தேசிய அரசாங்கம் என்ற போர்வையில் நமது நாடு எங்கே செல்கின்றது என்று எவருக்கும் தெரியவில்லை. என்னுடைய 60 வருட அரசியல் அனுபவத்தை வைத்து நான் சொல்வதை எவரும் புரிந்து கொள்வதுமில்லை. ஆனால் மீண்டும் ஓர் அழிவை எமது நாடு சந்திக்கப் போகின்றது என்பது மட்டும் உறுதி.

பக்கம் 19 >>>

# பொருளாதார நெருக்கடிக்கு முன்னைய அரசே காரணம்!

## மொரகஹகந்த நீர்த்தேக்க விழாவில் ஜனாதிபதி விளக்கம்

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தை ஜனாதிபதி திறந்து வைத்த போது...



அரசாங்கத்தின் மீது எந்த விதமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும்நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தால் அது கடந்த இரண்டாண்டுகளில் ஏற்பட்டது அல்ல, அது கடந்த அரசாங்கம் உருவாக்கியபாரியகடன்சுமையுடன் ஏற்பட்ட நிலைமையாகுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கிறார்.

இப்போது அந்தப் பிரச்சினையைத்தீர்க்கும்பொறுப்பை தனது தலைமையிலான அரசாங்கம் ஏற்றுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, எந்தவொரு சவாலுக்கு மத்தியிலும் ஏற்றுக் கொண்ட பொறுப்பை உரியவாறு நிறைவேற்றி நாட்டை சுபீட்சமான தேசமாகக் கட்டியெழுப்பும் பணியை மக்களுடன் இணைந்து தளர்வுகள் இன்றித் தாம் நிறைவேற்றுவார் எனவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முற்பகல் மொரகஹகந்த நீர்த்தேக்கத்துக்கான மங்கள நீர்நிரப்பு விழாவின் பின்னர் எலஹெர மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடமத்திய மாகாணமக்களின் கண்ணீர் கதைகளை முடிவுறுத்துவதற்காகமொரகஹகந்த அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக நான்கண்டகனவைநனவாக்கி அதன் பலனைப் பெறும் இன்றைய நாள் எனது வாழ்நாளில் மறக்கமுடியாதமிகவும்மகிழ்ச்சியான நாளாகும்.

மொரகஹகந்த அபிவிருத்தித் திட்டம் நாட்டின் கமத்தொழில், நீர்ப்பாசன துறைகளில் புதிய எழுச்சியை ஏற்படுத்தும்.

இவ்வாறானபாரியதிட்டங்கள் ஊடாக மன்னராட்சி காலங்களில் இருந்த தன்னிறைவு மற்றும் சுபீட்சமான பொருளாதாரத்தை மீண்டும் உருவாக்க எதிர்பார்க்கிறோம்.

நாட்டின் வானிலை மற்றும் காலநிலைகளுடன் இன்று நாம் கடுமையான வரட்சிக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ள போதிலும் மக்களை பட்டினியில் வாட விடுவதற்கு அரசாங்கம் தயாரில்லை. எனவே மிக விரைவாக வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டு குறைந்த விலையில் மக்களுக்கு அரிசியை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வரட்சியுடன் ஏற்படக்கூடிய சவால்கள் தொடர்பில் கவனமெடுத்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கும், அவர்களது நலன்களுக்காக தேவையானதிட்டங்கள்தயாரிக்கப்பட்டு, அதற்காக அமைச்சரவை உபகுழுவும் நியமிக்கப்பட்டு விரிவான திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. - என்றார்.

நாட்டின் நான்காவது இடத்தைப் பிடிக்கும் மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 460,000 ஏக்கர் அடியாகும். பிரதான அணைக்கட்டு மற்றும் துணை அணைக்கட்டுக்களுடனான இந்த நீர்த்தேக்கம் முப்பது ஆண்டுகளுக்கு பின்னர் நிர்மாணிக்கப்படும் பாரிய நீர்த்தேக்கமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரணில் - சர்வாதிகாரம் எதிரணி குற்றச்சாட்டு

தனக்கு ஏற்ற வகையில் அதிகாரங்களை வைத்துக்கொண்டு சர்வாதிகாரப் போக்குடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகின்றார் என ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

தற்போது நடைபெறும் கைதுகளும்கூட பிரதமரின் விருப்பப்படியே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அனைத்துமே ரணிலின் திட்டம்.

அம்பாந்தோட்டைக்குத் தேவையில்லை என்றால் பொலனறுவைக்கு வர்த்தக வலயத்தைத் தாருங்கள் என ஜனாதிபதியே பிரதமரிடம் கேட்கின்றார். இவற்றைப் பார்க்கும் போது ஜனாதிபதி பிரதமருக்குக் கொடுத்துள்ள இடத்தை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது.

இதனால் 'எனக்கு நீ மட்டும் தான் இருக்கின்றாய் என்றாலும் உனக்கு நான் மட்டும் தானா இருக்கின்றேன்' என பிரதமரிடம் கேட்கவேண்டிய நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டு விடும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அப்போதைய பிரதமரிடம் எதையுமே கேட்டதில்லை.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபர், பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் அனைவரும் நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். - என்றார்.

### கொழும்பு புதிய மகஸின் சிறையில்

# நாமல், கம்மன்பில்ல இருந்த அதே அறையில் வீரவன்ஸவும்

கொழும்பு, ஜன.12

இதற்கு முன்னர் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, உதயன் கம்மன்பில்ல போன்றோர் தடுத்து வைக்கப்பட்டிருந்த தனியான அறையிலேயே விமல் வீரவன்ஸ எம்.பியும் சிறைவைக்கப்பட்டிருக்கின்றார்.



கொழும்பு மகஸின் சிறையில் சுமார் ஐம்பது கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள 'ஈ' பிரிவிலேயே விமல் வீரவன்ஸ சிறை வைக்கப்பட்டுள்ளார். அங்கு அவரது பாதுகாப்புக் கருதி அவருக்குத் தனி அறை ஒதுக்கப்பட்டுள்ளது எனசிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அவரது உடல் நிலையை நேற்று பரிசோதித்த சிறைச்சாலை வைத்தியர் அவருக்குப் படுப்பதற்கு மெத்தையும், தலையணையும் வழங்கும்படி சிபாரிசு செய்தார் என்றும், அதனடிப்படையில் அவை அவருக்கு வழங்கப்பட்டன என்றும் கூறப்பட்டது.

வீட்டிலிருந்து அவருக்கு உணவு எடுத்துச்சென்று வழங்கவும்அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கென 40 வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டு அவற்றை அரசியல் மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தினார் என்றும் - அதன் மூலம் அரசுக்கு 9 கோடி பத்து லட்சம் ரூபா நஷ்டம் ஏற்படுத்தினார் என்றும் - குற்றம் சுமத்தப்பட்டு, அதனடிப்படையில் கைது செய்யப்பட்ட விமல் வீரவன்ஸவை எதிர்வரும் 24 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றமை தெரிந்ததே. (உ)

# வன்னி ஆசிரியர்களுக்கு 2018 இல்தான் இடமாற்றம்

"வன்னி மாவட்டத்தில் ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு 2018 ஜனவரியில்தான் யாழ். மாவட்டத்தில் சேவையாற்ற இடமாற்றம் வழங்கப்படும். அதற்கு முதல் வழங்கப்படமாட்டாது."

-இவ்வாறு அந்த ஆசிரியர்களின் பிரதிநிதிகளிடம் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் தெரிவித்துவிட்டார் வடக்கு மாகாண சபையின்பதில்முதலமைச்சரும், பதில் கல்வியமைச்சரும், விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன்.

இந்த விவகாரம் தொடர்பாக நேற்று முன்தினம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகத்தில் மறியல் நடத்திய இந்த ஆசிரியர்கள், பின்னர் அமைச்சின் செயலாளருடன் இழுபறிப்பட்டனர், தள்ளுமுள்ளுப்பட்டனர் என்பது தெரிந்ததே.

அந்த ஆசிரியர்களின்பிரதிநிதிகளை பதில் முதலமைச்சர் பொ. ஐங்கரநேசன் அழைத்து நேற்று மாலை பேச்சு நடத்தினர். அந்தச் சந்திப்பில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமாரும் பங்குபற்றினார்.

அப்போது பதில் முதலமைச்சர் ஐங்கரநேசன் ஆசிரியப் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்தவை வருமாறு :-

"ஆசிரிய சேவையின் ஆறு வருடங்களின் பின்னரே இடம் மாற்றம் என்பது மாகாண சபையில் ஏற்கனவே தீர்மானமாக நிறைவேற்றப்பட்ட முடிவு. அது ஐந்து வருடங்கள் அல்ல. ஆறு வருடங்களே.

உங்களுக்குரிய ஆறு வருட சேவை 2017 ஜனவரியிலேயே பூர்த்தியாகின்றது. அச்சமயத்தில் அனைத்து ஆசிரியர்களுக்கும் இடம்மாற்றம் வழங்குவது மாணவர்கள் கல்வியைப் பாதிக்கும். ஆண்டின் இடைநடுவில் அப்படி வழங்க முடியாது. ஆகவே அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் தான் இடமாற்றத்தை வழங்க முடியும்.

கடமை நேரத்தில் பணிக்குச் செல்லாமல் ஆர்ப்பாட்டம், பகிஷ்கரிப்பு என்று நீங்கள் மேற்கொண்ட செயற்பாடுகள் குறித்து பழிவாங்கலோ அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையோ எடுக்கப்படமாட்டாது. ஆனால் அதிகாரிகளுடன் வன்முறைப் போக்கில் நடந்து கொண்டோர் குறித்து உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவது தவிர்க்க முடியாதது."

- இப்படி பதில் முதலமைச்சர் தெரிவித்தார் என அறிய வந்தது. (உ)

# நாடாளுமன்ற, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை கூடும்!

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 225 இல் இருந்து 240 ஆக உயர்த்த வேண்டும் என்று எல்லை நிர்ணயக்குழு அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறித்துச் சர்ச்சைகள் எழுந்திருக்கும் வேளையில் இந்தப் பரிந்துரை அறிக்கை வெளியாகி உள்ளது என்றுநோக்கர்கள்தெரிவித்துள்ளனர்.

மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கு உரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை நாலாயிரத்து 250 இல் இருந்து எட்டாயிரத்து 500 ஆக அதிகரிக்க வேண்டும் என்றும் எல்லை நிர்ணயக் குழு பரிந்துரைத்துள்ளது.

கலாநிதி அசோகா பீரிஸ் தலைமையிலான ஆணைக்குழுவின் அறிக்கை நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடமும் மற்றும் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளின் தலைவர்களுக்கும் கையளிக்கப்பட்டது. (அ)

# வவுனியாவில் இளைஞன் கொலை

வவுனியா, ஜன.12

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா தேக்காவத்தைப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய பாலரஞ்சன் பாலநிரந்தன் என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

தேக்காவத்தை மயானத்துக்குச் செல்லும் வீதியில் உள்ள வீடு ஒன்றில் தனது பாட்டியுடன் வசித்து வந்த இந்த இளைஞர் மீது நேற்று பிற்பகல் முன்வீட்டில் வசித்து வந்தவர்கள் தாக்கியதில் இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவரின் மனைவி நயினாதீவில் வசித்து வருகின்றார் எனவும் இவரின் தாய், தந்தை சுவிஸ் நாட்டில் வசித்து வருகின்றனர் என்றும்தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (100)

# பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை

யாழ்ப்பாணம், ஜன.12

வட மாகாணத்தின் பாடசாலைகளுக்கு நாளை வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கப்பட உள்ளது என்று வடமாகாணக் கல்வி அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இன்று வியாழக்கிழமை பௌர்ணமி தினமாகவும் நாளை மறுதினம் சனிக்கிழமை தைப் பொங்கல் தினமாகவும் காணப்படுவதால் 13 ஆம் திகதியையும் விடுமுறை தினமாக அறிவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 21ஆம்திகதி சனிக்கிழமை 13 ஆம் திகதிக்கான பாடசாலை கற்கை நடவடிக்கைகள் நடைபெறும் என்று வட மாகாணக் கல்விச் செயலாளர் ஆ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (எ)

# இலங்கைக்கு ரூபா 160 கோடி நன்கொடையாக வழங்கிய ஆஸி.



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கும் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்தவும் ஆஸ்திரேலியாவால் 160 கோடி ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதாக திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இந்த நிதியுதவியை வழங்குவது தொடர்பான உடன்படிக்கை நேற்று கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய இல்லத்தில் நடைபெற்றது.

நிபுணத்துவ அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சிகள் அமைச்சின் செயலாளர் பீ.ரணேபுர மற்றும் இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் பிரைஸ் ஹச்சன் ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். (எ)

# முதலாம் தரத்துக்கான மாணவர் அனுமதி; சுற்றறிக்கையை அதிபர்கள் மீற முடியாது!

## கல்வி அமைச்சர் காரியவசம் தெரிவிப்பு



கொழும்பு, ஜன.12

கல்வி அமைச்சின் சுற்றறிக்கையை மீறி எந்தக் காரணம் கொண்டும் முதலாம் தரத்துக்கான அனுமதியை அதிபர்கள் வழங்க முடியாது. அதே போல பாடசாலைகளில் மாணவர்கள் அனுமதியில் பழைய மாணவர்கள் சங்கம் ஆதிக்கம் செலுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்க முடியாது என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

2017 ஆம் ஆண்டு முதலாம் தரத்துக்கான மாணவர்களை பாடசாலைகளுக்கு உள்வாங்கும் தேசிய நிகழ்வு நேற்று கொழும்பு கிரிபத்கொட விஹார மஹாதேவி மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அதிதிகளாகக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன், பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே கல்வி அமைச்சர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:

''நாங்கள் கல்வி அமைச்சு என்ற வகையில் எங்களுடைய கடமைகளை நேர்மையாக முன்னெடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். நாம் எதிர்கால எமது சந்ததிகளின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு சில முக்கியமான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.'' -என்றார்.

இதேவேளை, அங்கு கருத்துத் தெரிவித்த கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் கூறியவை வருமாறு:

''பெற்றோர்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பியவுடன் தமது கடமை முடிந்துவிட்டது என நினைக்க வேண்டாம். ஏனென்றால் ஒரு பிள்ளையின் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. பெற்றோர்கள், பாடசாலை ஆசிரியர்கள், இந்தச் சமூகம் இவை அனைத்தும் இணைந்தே ஒரு நல்ல மாணவனை உருவாக்க முடியும்.


''இன்று அரசாங்கம் எதிர்பார்க்கின்ற நல்லாட்சி அல்லது இனங்களுக்கு இடையிலான சகோதரத்துவத்தை சரியாக முன்னெடுப்பதற்கான இடம் பாடசாலையே. சிறுவர்களிடம் வேற்றுமை கிடையாது.

''அவர்கள் இன ரீதியாக, மத ரீதியாக வேறுபடுவது இல்லை.

''ஒரு பாடசாலையை எடுத்துக் கொண்டால் அங்கே எல்லா மாணவர்களும் ஒரே நிற உடையுடன் எல்லோரும் சமமானவர்கள் என்ற அடிப்படையில் பழகுகின்றார்கள்.

''எனவே, பாடசாலைகள் மூலமாகவே சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.'' என்றார். (எ)

# திருட்டுப்போன 86 சைக்கிள்களும் யாழ். பொலிஸ் அணிவகுப்பில் காட்சிக்கு!









*யாழ்.பொலிஸ் நிலையத்தின் அணி வகுப்பு நடவடிக்கை நேற்றைய தினம் யாழ். தலைமை பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றிருந்தது. இதன்போது யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்ஜீவ தர்மரட்ண அணிவகுப்பு நடவடிக்கையைப் பார்வையிடுவதையும் யாழ்.மாவட்டத்தின் அனைத்துப் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிகளும் அணிவகுப்பில் ஈடுபட்டுள்ளமையையும் படங்களில் காணலாம்.*

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட மூவரை யாழ்.பொலிஸ் நிலையப் பொலிஸார் கைதுசெய்திருந்த நிலையில் அவர்களை விளக்கமறியலில் வைக்க யாழ்.நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன் அவர்களிடம் இருந்து 86 சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்திருந்தன. குறிப்பாக யாழ். நகரின் பிரதான அலுவலகங்கள், வைத்தியசாலைகள் போன்றவற்றுக்குச் செல்லும் பொதுமக்கள் தமது சைக்கிள், பிரதான வீதிகளில் வாகனம் நிறுத்தும் இடங்களில் நிறுத்தி விட்டு செல்லும் போது திருட்டுப் போயிருந்தன. இவ்வாறான நிலையில் பொதுமக்களால் வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் இந்த சைக்கிள் திருடர்களைக் கைது செய்திருந்தனர். இதன்படி ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் 28 சைக்கிள்களும் யாழ். பொலிஸாரால் 58 சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டிருந்தன இந்தக் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய மூவரும் கைது செய்யப்பட்டிருந்தனர். கைது செய்யப்பட்ட மூவரும் சைக்கிள்களைத் திருடிச் சென்று அதனைப் பாகங்களாகப் பிரித்து விற்பனை செய்து வந்தனர் என்பது விசாரணைகளினூடாகத் தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் அந்த மூவரையும் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

(இ-7-58)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

இலங்கையின் சட்ட மற்றும் நீதித்துறைக்கு மிகப் பெரிய இழுக்காக இருப்பது 'பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்' - என்றால் யாரும் அதைத் தவறு என்று சொல்லமாட்டார்கள்.

நாகரிகமான சமுதாய வாழ்க்கை முறைக்கு முற்றிலும் பொருந்தாத, கொடூரமான, சீரழிவான, தரங்கெட்ட சட்ட ஏற்பாடுகளைக் கொண்டது இந்தச் சட்டம். நவநாகரிக உலகில் காட்டுமிராண்டிச் சட்ட ஏற்பாடுகளைக் கொண்டது அது என்பதும் மிகையில்லை.

இனப்பிரச்சினை தீவிரமடைந்த காலத்தில், தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைப் 'பயங்கரவாதம்' எனச் சித்திரித்த பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகள் 'பயங்கரவாதத்தைப் பயங்கரவாதத்தால் முறியடித்தல்' என்ற விநோதமான - விபரீதமான - சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நுட்பமான, நுணுக்கமான கருத்தியல் முனைப்போடு கொண்டு வந்ததே இந்தச் சட்டம்.

படையினருக்கும், பொலிஸாருக்கும் கட்டுமட்டில்லாத - கேட்டுக்கேள்வியில்லாத - அதிகாரங்களை வழங்கி, அரச பயங்கரவாதத்துக்கு சட்டப்பாதுகாப்பும், சட்ட அரணும் தந்த கொடுங்கோல் ஏற்பாடே இந்தச் சட்டம்.

ஆயுதம் ஏந்திய போராளிகளுக்கு எதிராக மட்டுமல்லாமல், அப்பாவித் தமிழர்களுக்கு எதிராகவும், அரச பயங்கரவாதம் கோலோச்சுவதற்கு வழிவகை செய்ததும் இந்தச் சட்டமே.

அரசும், அதன் அரூபக் கரங்களும், இந்தச் சட்டத்தை வைத்து நடத்திய சித்து விளையாட்டுக்களைத் தட்டிக் கேட்கத் திராணியற்று, தகுதியற்று, இலங்கையின் நீதித்துறை அதற்குத் துணை போனதன் காரணத்தாலேயே அந்த நீதித்துறையைத் தமிழரும் நம்பாமல் - சர்வதேச தரப்புகளும் நம்பாமல் - யுத்தக் குற்ற விசாரணை விடயங்களுக்குச் சர்வதேச நீதிபதிகளும், மற்றும் சர்வதேச தரப்புகள் சம்பந்தப்பட்ட கலப்பு நீதிப் பொறிமுறைகளும் தேவை என்று வலியுறுத்தும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

மொத்தத்தில் இலங்கையின் நீதித்துறைக்கு இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒரு பேரிழுக்கு.

அந்தச் சட்டத்தை மாற்றி, அதற்கு மாற்றீடாகப் 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்' என்ற பெயரில் புதிய சட்டமூலம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு நல்லாட்சி அரசு தீர்மானித்திருக்கின்றது. பின்வரும் ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக புதிய சட்டமூலத்தின் வடிவத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்குச் சமர்ப்பித்திருக்கின்றார் என்று தெரிய வருகின்றது.

* பொலிஸாருக்கு ஒரு சந்தேக நபர் அளிக்கும் வாக்குமூலத்தை அவருக்கு எதிரான சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயத்தைப் புதிய சட்டம் நீக்குகின்றது.

* சந்தேகநபரைக் கைது செய்து 48 மணி நேரத்துக்குள் நீதிமன்றின் முன்னிலையில் ஆஜர்படுத்தவேண்டும்.

* இந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுவோர் சாதாரண சட்டத்தின் கீழ் உள்ளமை போன்று தமது சட்டத்தரணிகளின் சேவையைச் - சந்திப்பை - பெற்றுக்கொள்ள முடியும். அதை மறுக்க முடியாது.

* விசாரணையின்றி ஒரு சந்தேகநபரை ஆகக்கூடுதலாக நான்கு மாதங்களுக்கு மேல் தடுப்புக்காவலில் வைத்திருக்க முடியாது.

* பயங்கரவாதம் தொடர்பான குற்றங்களின் விடயத்தில் அதிக தயவு தாட்சண்யம் இருக்காது.

- இதைப்போன்ற விடயங்கள் புதிய சட்டமூலத்தின் வரைவில் இடம்பெற்றிருக்கின்றன என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

மேம்போக்காகப் பார்க்கும் போது, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தையும் விட இது ஓரளவு சிறந்ததாகவே தென்படுகின்றது.


முக்கியமாகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் யாரும் தொடர்பு கொள்ளமுடியாத - யாருமே பார்க்கமுடியாத - இடத்தில் ஒரு சந்தேகநபரைத் தடுத்து வைத்துக்கொண்டு, அச்சமயத்தில் அவர் பொலிஸாருக்கு வழங்கியது என்று கூறப்படும் வாக்குமூலத்தையே அச் சந்தேகநபருக்கு எதிரான சாட்சியாக ஏற்றுக் கொண்டு, பயன்படுத்தி, அதன் அடிப்படையில் அவரைத் தண்டிக்கும் காட்டுமிராண்டித்தனச் சட்ட ஒழுங்கைப் புதிய சட்டம் நீக்குகின்றது என்பது ஆறுதலான விடயம்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் எந்தக் கேட்டுக் கேள்வியுமின்றி 18 மாதங்களும் -

அவசர காலச் சட்டம் அல்லது பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் நடைமுறையில் இருந்தால், அதையும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தையும் ஒன்றிணைத்துப் பயன்படுத்தி காலவரையறையின்றியும் -

ஒரு சந்தேகநபரைத் தடுத்துவைக்கும் கொடூரத்தைப் புதிய சட்டம் 'நான்கு மாத காலத்துக்கு மேல் தடுத்து வைக்க முடியாது' - என்ற சட்ட ஏற்பாடு மூலம் நீக்க முயல்கின்றது என்பது வரவேற்கத்தக்கது.

எது, எப்படியென்றாலும் புதிய சட்ட மூலத்தின் முழு வடிவமும் வெளிவந்தால்தான், பயங்கரவாதச் சட்டத்தின் கொடூர ஏற்பாடுகளில் எவை நீக்கப்படுகின்றன, எவை தொடரப்போகின்றன என்பதைக் கண்டுபிடிக்க முடியும். அதுவரை இந்தப் புதிய சட்டம் மேலானது - அல்லது முன்னையதுடன் ஒப்பிடுகையில் பரவாயில்லை, தேவலை - என்று கூறுவது எந்த வகையிலும் பொருத்தமற்றதே.




## நேபாளத்தில் இரு விகாரைகளை புனரமைக்க இலங்கை தீர்மானம்

கொழும்பு, ஜன.12

நேபாளத்தில் பூகம்பத்தால் அழிந்த முக்கியமான இரண்டு பௌத்த வழிபாட்டுத் தலங்களைப் புனருத்தாரணம் செய்து கொடுக்க இலங்கை அரசு தீர்மானித்துள்ளது என நேபாளத்துக்கான இலங்கைத் தூதுவர் டபிள்யு.எஸ். பெரேரா தெரிவித்தார்.

நேபாளத்தின் புங்க மாட்டியில் உள்ள ராத்தோ மச்சிந்திரநாத் மற்றும் ஸ்வயம்புவில் உள்ள அனந்த குட்டி விகாரை ஆகியன 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நேபாளத்தில் ஏற்பட்ட பூகம்பத்தில் தரை மட்டமாகின.

இந்தநிலையில், நேபாளத்தின் துணைப் பிரதமரும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருமான பிமலேந்திரா நிதியைச் சந்தித்த நேபாளத்துக்கான இலங்கைத் தூதுவர் திருமதி பெரேரா, அந்த இரண்டு வழிபாட்டுத் தலங்களையும் புனருத்தாரணம் செய்து தர இலங்கை விரும்புகின்றது எனத் தெரிவித்தார். இந்தத் தகவலை நேபாள உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் நேபாள உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''இலங்கை மற்றும் நேபாளம் ஆகிய இரண்டு நாடுகளுக்கும் இடையேயான இராஜதந்திர உறவுகள் ஆரம்பித்து 60 வருடங்கள் பூர்த்தியானமையை முன்னிட்டு நடைபெறவுள்ள நிகழ்வுகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்வார்.

''இந்தச் சந்திப்பின் போது, கௌதம புத்தரின் பிறந்த இடமான லும்பினிக்கு விஜயம் செய்ய இலங்கை மக்களை ஊக்குவிக்க வேண்டும் என்று நேபாளத் துணைப் பிரதமர் கேட்டுக் கொண்டார்.'' -என்றுள்ளது. (எ)

## வில்பத்தில் காடழிப்பு இடம்பெறவில்லை குற்றச்சாட்டுகளை மறுக்கின்றார் ரிசாட்!

வில்பத்துக் காடு அழிக்கப்படுவதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என்று அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

''2012 ஆம் ஆண்டில் வனப் பகுதி பாதுகாக்கப்பட்ட வலயமாக அறிவிக்கப்பட்ட போது அதன் பூர்வீகக் குடியிருப்பாளர்கள் புத்தளத்தில் உள்ள இடம்பெயர் முகாம்களில் வாழ்ந்து வந்தனர்.

''22 ஆண்டுகளின் பின்னர் தங்களது சொந்த ஊர்களுக்குச் செல்லும் போது அந்தக் காணிகளை அரசாங்கம் கையகப்படுத்திக் கொண்டுள்ளது.

''காணிகள் சுவீகரிக்கப்பட்டமை சட்டவிரோதமானது. இதனால் பூர்வீக மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

''காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளமை மக்களுக்குத் தெரியாது எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் தங்கக் கடத்தல்களுடன் தம்மையும் தமது சகோதரர் ஒருவரையும் தொடர்புபடுத்தி வெளியிடப்பட்ட செய்திகள் பொய்யானவை.''- என்றார். (எ)

## கல்வியியற் கல்லூரிகளில் புதிய மாணவர் அனுமதி நேர்முகப்பரீட்சை ஜன.20 இல்

கொழும்பு, ஜன.12

கல்வியியற் கல்லூரிகளுக்கு இந்த வருடத்துக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று ஆசிரியர் கல்வித் தலைமை ஆணையாளர் கே.எம்.எச்.பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த வருடம் கல்வியியற் கல்லூரிக்கு 4 ஆயிரத்து 65 பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (எ)

## சர்வதேச பாடசாலைகளை பதிவுசெய்வதற்கு அனுமதி

கொழும்பு, ஜன.12

சர்வதேச பாடசாலைகள் பதிவு தொடர்பில் காணப்பட்ட தடை நீக்கப்பட உள்ளது.

சர்வதேச பாடசாலைகளைப் பதிவு செய்து கொள்வதை இடை நிறுத்துவதற்கு கடந்த அரசு தீர்மானித்திருந்தது.

இந்தத் தீர்மானத்தை ரத்து செய்து மீளவும் சர்வதேசப் பாடசாலைகளைப் பதிவு செய்வதற்கு அனுமதி வழங்கத் தற்போதைய அரசு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பிலான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்பட உள்ளது என அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச பாடசாலைகளின் தரத்தை உயர்த்துவதற்கும், ஒழுங்கு விதிகளுக்கு உட்படுத்தவும் பொறிமுறைமை ஒன்றை உருவாக்கும் நோக்கில் கடந்த அரசு சர்வதேச பாடசாலைகளுக்கான பதிவு அனுமதியை இடை நிறுத்தியிருந்தது.

எனினும், தற்போதைய அரசு எவ்வித ஒழுங்கு விதிகளையும் வகுக்காது தடையை ரத்துச் செய்துள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதுஎன கல்வித்துறைசார் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ)

### நாளை

13.01.2017
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: பூசம் பி.இ 02.18 வரை
திதி: பிரதமை மாலை 04.55 வரை
சுபநேரம் : 06.33 – 08.03 வரை
இராகுகாலம் : 11.03 – 12.33 வரை

## மின்தடை

யாழ்பாணம், ஜன.12

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோகமார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் மின் தடை ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் 6.30 மணிவரை வவுனியா பிரதேசத்தில் தெற்கிலுப்பைக்குளம், தவசிக்குளம் ஆகிய இடங்களிலும் -

நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 8 மணி முதல் 5மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில் கோம்பாவில், இரணைப்பாலை ஆகிய இடங்களிலும் மின தடை ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)



கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கத் தலைவர் ம.ஜெகநாதன் பொங்கல் பொதி விற்பனையைத் தொடங்கி வைக்கிறார். ஒரு கிலோ கிராம் தீட்டல் அரிசி, 500 கிராம் பயறு, 20 கிராம் கச்சான் முத்து, 50 கிராம் பிளம்ஸ் உள்ளடக்கிய இந்தப் பொதி 230 ரூபாவுக்கு கிளைகளில் விற்பனை செய்யப்படுகிறது. (இ-30)

## திருமறைக் கலாமன்ற பொங்கல் வைபவம்

யாழ்பாணம், ஜன.12

திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் வைபவம் நாளை மறு தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் 238, பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலா மன்றத்தின் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 5.30 மணிக்கு பொங்கல் வைபவமும் அதனைத் தொடர்ந்து காலை 7.00 மணிக்கு பண்பாட்டு வழிபாடும் இடம்பெறும்.

இந் நிகழ்வில் மன்றத்தின் அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலா மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ)

## ‘கைவினைக்கதிர்’ நூல் வெளியீடும் கைப்பணியாளருக்கான ஒன்றுகூடலும்

### ஞாயிறன்று யாழ்.சரஸ்வதி மண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்.மாட்டக் கைப்பணி அபிவிருத்திச் சங்கத்தின் ‘கைவினைக் கதிர்’ நூல் வெளியீட்டு விழாவும் கைப்பணியாளர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வும் - எதிர் வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை யாழ்ப்பாணம் சேர். பொன் இராமநாதன் வீதியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறும்.

யாழ். மாவட்டக்கைப் பணி அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.இரத்தின கோபால் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகனும் -சிறப்பு விருந்தினர்களாக தொழிற்துறைத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கம், வடமாகாண தேசிய அருங்கலைகள் பேரவை உதவிப் பணிப்பாளர் க.நவதர்ஷன் ஆகியோரும்-

கௌரவ விருந்தினர்களாக யாழ்.வர்த்தகத் தொழிற்றுறை மன்றத் தலைவர் கே.விக்னேஸ், தமிழ் எவ்.எம். வானொலி சிரேஷ்ட அறிவிப்பாளர் ரி.எஸ்.முகுந்தன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் நூல்வெளியீடு, கௌரவித்தல்கள், நடனம், கவியரங்கம் பேரன்றவையுடன் சிறப்புரைகளும் இடம்பெறும். (இ)

## உயர்தர மாணவருக்கு முழுநிலா கருத்தரங்கு!

யாழ்ப்பாணம், ஜன.12

2017 ஆம் ஆண்டுக்கான க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குக் கலை மற்றும் தொழில்நுட்பவியல் பிரிவுப் பாடங்களுக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கருத்தரங்குகள். சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் பிரதி மாதத்தின் முழுநிலா நாள்களில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை மீசாலை உயர் கலைக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளன.

இந்தக் கருத்தரங்கில் கிளிநொச்சி, முல்லைத் தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இலவசமாகப் பங்கு பற்ற முடியும் என்று லயன்ஸ் கழகக் கல்வி அபிவிருத் தித் திட்ட இணைப்பாளர் சு.வீரசுதாகரன் தெரிவித்திருக்கின்றார். (இ-2)

## ஹன்ரர் சாரதிக்கு விளக்கமறியல்

வடமராட்சி, ஜன.12

பருத்தித்துறை காரையடிப் பகுதியில் சட்டவிரோத மணல் ஏற்றி வந்து வீதியால் சென்ற ஹயஸ் வாகனத்தை மோதி அதில் பயணித்த இருவர் படுகாயமடையக் காரணமாக இருந்த ஹன்ரர் சாரதியை எதிர் வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித் துறை நீதிவான் நீதி மன்ற நீதிவான் நளினி கந்தசாமி உத்தரவிட்டார்.

கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமைந்த ஹன்ரர் சாரதியை நேற்று முன்தினம் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கு நேரில்சென்று பார்வையிட்ட பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் அவரை விளக்க மறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-40)

# குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு முக்கிய இடங்களில் ‘கமெரா’க்கள்

## சட்டத்தை மீறுவோர் கண்காணிக்கப்படுவர் என்கிறார் எஸ்.எஸ்.பி.

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்ப்பாணத்தில் குற்றச்செயல்கள் மற்றும் வீதி விபத்துக்களைத் தடுக்கும் வகையில் முக்கிய இடங்களில் கண்காணிப்பு ‘கமெரா’க்கள் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எஸ்.பி. கஸ்ரன் ஸ்ரனிஸ்லஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச்சிவில் பாதுகாப்புக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் உள்ள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் பொதுமக்களால் முறைப்பாகளும் முன்வைக்கப்பட்டன.

வீதிப் போக்குவரத்து கடமையில் உள்ள பொலிஸார் பொது மக்களை மதிப்பது இல்லை.

குறிப்பாக வீதி ஓரமாக ஒளித்து நின்றுவிட்டு திருடர்களை மடக்கிப் பிடிப்பதைப் போல் திடீரென வீதிக்கு ஓடி வந்து வாகனங்களை மறிக்கின்றார்கள். இரவு வேளைகளில் வீதியின் இரண்டு பக்கமும் நிற்கும் பொலிஸார் வாகனங்களையும், மோட்டார்சைக்கிள்களில் செல்பவர்களைக் கண்டதும் சாரதியின் முகத்துக்கு ‘ரோச் லைட்’ அடித்து மறிக்கின்றார்கள்.

ஏ-9 வீதியின் கடமையாற்றும் பொலிஸார் திடீரென வாகனங்களுக்கு முன் சென்று வேகக் கணிப்புக் கருவியை நீட்டுகின்றார்கள். வேறு வாகனத்தின் வேகக் கணிப்பை அவர்களுக்கு காண்பித்து வழக்குப் பதிவு செய்யப் போகிறோம் எனக் கூறுகின்றார்கள்.

-இவ்வாறு முறையிட்டார் யாழ்.வணிகர் கழகத்தலைவர் ஆர்.ஜெயசேகரம்.

இதேவேளை, இதற்குப் பதிலளித்த யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸார் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தவே இவ்வாறான கடமைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இருப்பினும் முகங்களுக்கு ரோச் லைட் அடித்து மறிப்பதை நிறுத்துமாறு சகல பொலிஸாருக்கும் அறிவித்தல் கொடுக்கப்படும். இனி வரும் நாட்களில் சிவப்புச் சமிஞ்சை விளக்குகளைக் கொண்டே பொலிஸார் வாகனங்களை மறித்துச் சோதணை இடுவர்.

மேலும் வீதி விபத்துக்கள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் முக்கிய இடங்களில் கண்காணிப்பு ‘கமெரா’க்கள் பொருத்தப்படும். அக் கெமராக்கள் ஊடாக வீதியில் சட்டத்தை மீறுபவர்கள் கண்காணிக்கப்படுவார்கள் என்று மேலும் தெரிவித்தார். (இ)

# கொழும்புத்துறையில் முன்பள்ளி திறப்புவிழா








கொழும்புத்துறை உதயபுரம் தூய செபஸ்ரியன் முன்பள்ளித் திறப்புவிழா கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் பங்குத் தந்தை அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் தலைமையில் யாழ்.ஆயர் அதிவண யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் பெயர்ப்பலகையும் முன்பள்ளிக் கட்டடமும் இறைஆசீருடன் திறந்துவைக்கப்பட்டன.

கியூடெக் - கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட் தந்தை இயூயின் பிரான்சிஸின் வழிகாட்டலில் கின்டர் மிஷன் நிறுவனஉதவியுடன் நிறுவப்பட்ட உதயபுரம் தூய செபஸ்ரியன் முன்பள்ளித் திறப்பு விழாவில் பாலர் பாடசாலை மாணவர்களும் பெற்றோர்களும், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், கியூடெக் பணியாளர்களும் கலந்து கொண்டனர். சென். அன்ரனிஸ் பாடசாலை மாணவர்களின் பான்ட் வாத்திய இசையுடன் மாணவிகளின் கலைநிகழ்ச்சியும் இடம்பெற்றது.

◆ வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டி அதிகாரப் பகிர்வு ◆ சித்திரவதை, கொலைகளை விசாரிக்க விசேடபொறிமுறை
◆ கலப்பு நீதிமன்றம் உருவாக்கம் ◆ அரசியல் கைதிகள் விடுதலை ◆ காணாமற் ஆக்கப்பட்டோருக்கான நீதியும், இழப்பீடும்

# 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து திருமலையில் நேற்று கவனவீர்ப்பு போர்!





திருகோணமலையில் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து நேற்றுக் காலை 9.30 மணியளவில் மாபெரும் கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள சட்ட உதவி மையத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மதகுருமார்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மாவட்டச் சமூக ஆர்வலர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில், வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டி அதிகாரப் பகிர்வே நாம் கோரும் அரசியல் தீர்வு, கலப்பு நீதி மன்றம் உருவாக்கப்பட்டு நீதி நிலை நாட்டப்பட வேண்டும் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்,நடந்தேறிய சித்திரவதை மற்றும் படுகொலைகளை விசாரிப்பதற்கான விசேட பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியும் இழப்பீடும் வழங்கப்பட வேண்டும் ஆகிய ஐந்து கோரிக்கைகளை முன்வைத்தே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைப்பதற்கான மகஜரை திருகோணமலை மறை மாவட்ட ஆயர் வண. கிருஸ்டியன் நோயல் இமானுவேலிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கையளித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் வண.கிருஸ்டியன் நோயல் இமானுவேல் கருத்துத் தெரிவிக்கையில்:-

எமது மக்களின் பிரச்சினைகளைத் தொடர்சியாக இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தி தீர்வுகோரிப் பல ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால், இன்னும் தீர்வு எட்டப்பட வில்லை. இதனால் தான் நாம் ஐக்கிய நாடுகள் சபையை நாட வேண்டியுள்ளது. எமது மக்களின் பிரச்சினைகளுக்கு உண்மையான தீர்வு கிடைக்க வேண்டும் என்றால் தொடர்ந்து நாம் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டி உள்ளது. -என்றார். (ச)

# ‘பேண்தகு யுகம் 3’ தொடர்பில் கிழக்கில் பல்வேறு திட்டங்கள்

## ஜனாதிபதி பங்குபற்றலுடன் நடைபெறும்



மட்டக்களப்பு,ஜன.12

பேண்தகு யுகம் - மூன்றாவது ஆண்டு ஆரம்பமாகியுள்ளதை முன்னிட்டு நாடு முழுவதும் பல்வேறு திட்டங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு கட்டமாக ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மட்டக்களப்பு விஜயத்துக்கான திட்டமிடல் கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வறுமை ஒழிப்பை நோக்காகக் கொண்ட ஜனாதிபதியின் மாவட்ட ரீதியான செயற்பாடுகளின் ஒருபகுதியாக நடைபெறும் ஜனாதிபதி விஜயம் தொடர்பாக இந்த திட்டமிடல் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான ஜனாதிபதியின் முதலாவது விஜயத்தின்போது களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள நூறு கோடி 14 மில்லியன் ரூபா செலவிலான நான்கு மாடிக் கட்டடம் ஜனாதிபதி தலைமையில் திறந்து வைக்கப்பட உள்ளது. இதனைத் தொடர்ந்து ஏறாவூருக்கு விஜயம் செய்து போதைக்கு எதிரான செயற்திட்ட வேலைகள், மரநடுகை மற்றும் காணி ஆவணங்கள் வழங்கல், சூழலியல் தொடர்பான பிரதான நிகழ்வுகள் என்பவற்றில் ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் அரச அதிபர்கள் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர், மேலதிக செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)



கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் மற்றும் இலங்கைக்கான மலேஷிய உயர்ஸ்தானிகர் வான் ஸ்ய்டி வான் அப்துல்லாஹ் ஆயோருக்கு இடையிலான உத்தியோகபூர்வச் சந்திப்பு நேற்று மலேஷிய உயர் ஸ்தானிகர் காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது கிழக்குக்கான புதிய முதலீடுகளை அதிகரித்தல் மற்றும் வேலையில்லாப் பிரச்சினை என்பவற்றுக்குத் தீர்வு கண்டு புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் ஆகியன தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (ச)

# காணி அனுமதிப்பத்திரங்களை வழங்குமாறு கப்பல்துறைக் கிராம மக்கள் வேண்டுகோள்

திருகோணமலை,ஜன.12

திருகோணமலை, கப்பல் துறைக் கிராமத்தில் நீண்ட காலமாகக் காணி அனுமதிப் பத்திரங்கள் இன்றியுள்ள மக்களுக்கு காணி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கிராமிய அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

கப்பல்துறைக் கிராமத்தில் புனரமைக்கப்பட்ட பிரதான வீதியைப் பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட கிழக்கு மாகாணக் காணி அமைச்சர் ஆரியவதி கலப்பதி மற்றும் மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜனார்த்தனன் ஆகியோரிடமே இந்த வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

இதன்போது பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்கையில் - முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் இக்கிராமத்தில் நாம் மீள்குடியேற்றப்பட்டோம். அப்போது, அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தித் தரப்பட்டன. இருப்பினும், நாம் குடியிருக்கும் இக்காணிகளுக்கு இதுவரையில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை. எனவே, நாம் குடியிருக்கும் இந்தக் காணிகளுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.- என்றனர். (ச)

# கறுவாக்கேணியில் சேதனப்பசளை நிலையம்

மட்டக்களப்பு கறுவாக்கேணிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை சேதனப் பசளை விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அமைச்சின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தில் ஐந்து இலட்சம் ரூபாய் நிதி உதவியில் இந்த நிலையம் கட்டி முடிக்கப்பட்டது. இதன்போது, இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி உதவியில் விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ச)

# ஆயிரக்கணக்கான வயல்கள் பாதிப்பு; அக்கரைப்பற்று விவசாயிகள் விசனம்

அக்கரைப்பற்று ஆராய்ச்சிச் சின்ன முகத்துவாரம் பகுதியில் களப்பு நீர் வற்றியதால் ஆயிரக்கணக்கான வயல் நிலங்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. தில்லையாற்று களப்பு கடலுடன் இணையும் பகுதியை ஒரு சிலர் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் வெட்டியதன் விளைவாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

வறட்சியான காலநிலை தொடரும் இக்காலகட்டத்தில் சில ஏக்கர் வயல் நிலத்தை அறுவடை செய்வதன் பொருட்டு அவ்வயல் நிலங்களில் உள்ள வடிச்சல் நீரை வெளியேற்றுவதற்காகவே இவ்வாறு வெட்டப்பட்டுள்ளது.

விவசாய ஆரம்ப கூட்டத்தில் இம்மாதம் 15ஆம் திகதியே பிற்பாடே அறுவடைக்கான திகதி நிர்ணயிக்கப் பட்டபோதும். முன் கூட்டியே விதைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஒரு சிலரின் வயல் நிலங்கள் அறுவடை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவர்களைக் காப்பாற்றுவதற்காக மேற்கொள்ள இந்த நடவடிக்கையால் களப்பு நீரை நம்பி விவசாயத்தை மேற்கொண்ட ஆயிரக் கணக்கான நிலங்கள் பாதிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்று விவசாயிகள் விசனம் தெரிவித்தனர். (ச)

# மொறவெவ பிரதேசத்தில் உள்ள மதத் தலங்களுக்குப் பாதுகாப்பு

திருகோணமலை மொறவெவப் பிரதேசத்திலுள்ள அனைத்து மத வழிபாட்டுத் தலங்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று திருகோணமலை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 08 ஆம் திகதி திருகோணமலை -ஹொரவபொத்தானை பிரதான வீதியில் மூன்று புத்தர் சிலைகளும் புல்மோட்டை 14 ஆம் கட்டைப் பகுதியில் ஒரு புத்தர் சிலையும் சேதமாக்கப்பட்டன. இதனை அடுத்து, மொறவெவப் பிரதேசத்திலுமுள்ள அனைத்து மத வழிபாட்டுத் தலங்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நாட்டில் உள்ள பிரச்சினைகளுக்கு ஆயுதங்களால் தீர்வு காண முடியாது!

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, ஜன.12

நாட்டில் உள்ள பிரச்சினைகளுக்கு ஆயுதங்களால் தீர்வுகாண முடியாது. அறிவு, ஞானத்தால் மாத்திரமே இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கெப்பெட்டி பொல வீரர்களின் நினைவு தின வைபவம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுதந்திரப் போராட்ட ஆரம்பம் எனக் கருதப்படும் 1818 ஆம் ஆண்டு ஊவா வெல்லஸ்ஸ போராட்டத்தையும், அதற்குத் தலைமை தாங்கிய கெப்பட்டிபொல திஸாவ தலைமையிலான வீரர்களையும் நினைவுகூரும் வகையில் இந்த நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சின் வழிகாட்டலில் அரசாங்கத் தகவல் திணைக்களம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இதேவேளை, ஊவ வெல்லஸ்ஸ போராட்ட வீரர்களை தேசத் துரோகிகள் பட்டத்திலிருந்து விடுவிப்பதற்கு ஜனாதிபதி அண்மையில் நடவடிக்கை எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றியவை வருமாறு:-

நாட்டில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை உண்டு. தீர்வுகாண்பதற்காக வீரகெப்பெட்டிபொல நிலமே பயன்படுத்திய வாளால் அல்லது ரி-56ரகத் துப்பாக்கியால் அல்லது பல்குழல் தாங்கி மூலம் தீர்த்து விட முடியாது.

அறிவு மற்றும் ஞானத்தால் மாத்திரமே இதனைத் தீர்க்க முடியும்.

வளர்சிகண்ட நவீன உலகை நாம் இன்று காணு கின்றோம். வல்லரசு நாடுக ளின் அதிகாரபோக்கு காணப்படுகிறது. பல்வேறு முகங்களில் இவை வெளிப்படு கின்றன. நவீன உலகில் புதிய காலனித்துவ வடிவமைப்பில் இவை உருவெடுத்துள்ளன.



எமது தாய்நாடு பூகோள ரீதியில் முக்கிய கேந்திர நிலையத்தில் அமைந்துள்ளதால் உலக நாடுகளுக்கு முக்கியத்துவமானது.

வீரகெப்பெட்டிபொலநிலமே போன்று எமது படை வீரர்களும் தமது உயிரைத் தியாகம் செய்து நாட்டைக்காத்துள்ளனர்.

பிரச்சினை தீர்வுக்கு பயனற்றவர்களின் வெற்று பேச்சுக்களையும் விடப் புத்திஜீவிகள், சிறந்த படித்த மக்களினதும் தேசாபிமானிகளதும் நேர்மையான ஆலோசனைகளே நாட்டுக்குத் தேவையாகும்.

ஒற்றையாட்சி மற்றும் வளமான தேசமாக நாட்டை முன்னோக்கி இட்டுச் செல்வதற்கு நாட்டின் மக்கள் சேவகன் என்ற வகையில் நான் தயாராக இருக்கிறேன்.

எனவே, பேதங்களைப் புறந்தள்ளி ஒன்றிணையுமாறு அனைவருக்கும் கௌரவமாக அழைப்பு விடுக்கின்றேன்.

கேள்விகளையும் விமர்சனங்களையும் முன்வைக்க எவருக்கும் சந்தர்ப்பம் உண்டு. ஆனால். இதன் மூலம் தீர்வுகளும், வழிகாட்டல்களும் கிடைத்து விடாது. இன்றைய சவால்களைப் புரிந்து கொண்டு எமது மேலான வரலாற்றின் பாடங்களைக் கற்றுக்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

நவீன தொழில்நுட்பத்துடன் சமூகத்தில் வந்துசேரும் பொருத்தமில்லாத விடயங்களைத்தவிர்த்து எமது சிறந்த வரலாற்றையும் கலாசாரத்தையும் பறைசாற்றும் வகையில் பொறுப்புக்களை நிறைவேற்றும் காலம் உதயமாகியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு நீதிபதிகள் குறித்து முடிவெடுக்கும் உரிமை அரசுக்கே!

## அமைச்சர் ராஜித கூறுகிறார்



போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதா இல்லையா என்பது தொடர்பில் இலங்கை அரசாங்கமே முடிவு செய்யும். அது அரசாங்கத்தின் இறையாண்மை உரிமையாகும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போர்க்குற்றச்சாட்டுகள் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த போது, போர்க்குற்ற விசாரணைக்கான நீதிச் செயல் முறையில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புப் பெறப்பட வேண்டும் என்று கூறியிருந்தார்.

அவர் அதனைப் பரிந்துரை செய்திருந்தாலும், அதுபற்றி முடிவு செய்வது இலங்கையின் இறையாண்மை உரிமையாகும்.

வெளிநாட்டு நீதிபதிகள் குறித்து முடிவெடுக்கும் அதிகாரத்தை இலங்கை அரசாங்கமே கொண்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் மைத்திரி!

## எஸ்.பி.திசாநாயக்க



2020 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மைத்திரிபால சிறிசேனவையே, வேட்பாளராகப் போட்டியில் நிறுத்தும் என்று அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டை வழிநடத்தச் சிறந்த தலைவர் மைத்திரி என்பதால், ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் மைத்திரிபால சிறிசேனவே போட்டியிட வேண்டும் என்று, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பெரும்பான்மையானோர் கோருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கும் விடயத்தில் புதிய கொள்கை!



பொலிஸ் தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கும் போது புதிய கொள்கையொன்றைக் கடைப்பிடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சட்டம் மற்றும் ஒழுங்கு, தென்னிலங்கை அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய பொலிஸ் ஊடகப் பேச்சாளராக பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி நியமிக்கப் பட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள சட்ட ஒழுங்கு அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

அங்கு உரையாற்றிய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்தவை வருமாறு:-

அம்பாந்தோட்டைச் சம்பவம் தொடர்பில் விசேட விசாரணை இடம்பெற்று வருகிறது.

மேலும் பிரதேச மட்டத்தில் பொலிஸ் ஊடகப் பிரிவுகளை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட தகவல்களை அமைச்சின் ஊடாக, பொலிஸ்மா அதிபர் ஊடாக அல்லது அவரின் அதிகாரத்தைப் பெற்ற உத்தியோக அதிகாரி ஊடாக ஊடகங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவில் திருத்தம் செய்ய அரசு இணக்கம்!

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக, புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பான வரைவில் திருத்தங்களை மேற்கொள்ள இலங்கை அரசு இணங்கியுள்ளது.

புதிதாகக் கொண்டு வரப்படும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பான வரைவு ஆவணம் கடந்த செப்ரெம்பர் மாதம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த வரைவு ஆவணம், வெளியே கசிந்தது. இதையடுத்து, அதில் இடம்பெற்றிருந்த பல்வேறு விடயங்கள் குறித்துக் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே, அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட மூல வரைவில் திருத்தங்களைச் செய்ய அரசாங்கம் இணங்கியுள்ளது.

இந்தத் திருத்தங்கள் தொடர்பாக, நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசியப் பாதுகாப்புத் தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழுவின் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சூடான விவாதங்கள் நடந்துள்ளன என்று துறைசார் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர் ஒருவரிடம் இருந்து முதல் வாக்குமூலம் பெறுவதற்கு முன்னதாகச், சட்டவாளரை அனுமதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட சில விதிமுறைகள் தொடர்பாக இன்னமும் முடிவு எடுக்கப்படாமலேயே நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் முடிவடைந்துள்ளது.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டவுடன், சட்டவாளரைச் சந்திக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. என்பன, துறைசார் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளன.


எனினும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் திருத்தங்களுடன் நேற்று முன்தினம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே இந்தத் திருத்த வரைவை அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

இந்த திருத்தங்களுக்கு அமைச்சரவை அனுமதி பெறப்பட்ட பின்னர், நாடாளுமன்றத்தில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு குறித்து சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கவலை வெளியிட்டிருந்தன. இந்நிலையிலேயே, அதில் சில திருத்தங்களை செய்ய அரசாங்கம் இணங்கியுள்ளது.

# காணாமற்போனோரின் உறவுகள் வவுனியாவில் நேற்று கவனவீர்ப்பு

## மாகாண சுகாதார அமைச்சருக்கு எதிராகக் கோஷம்




வவுனியா, ஜன.12


வடமாகாண சுகாதார அமைச்சருக்கு எதிராக காணாமற்போனோரின் உறவுகள் வவுனியா கந்த சுவாமி ஆலயவளாகத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பாகவவுனியாவில் காணாமற்போனோரின் உறவினர்களினால் அடையாள உண்ணா விரதபோராட்டம் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது காணாமற்போனோரின் உறவினர்களால் எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தனின் புகைப்படம் எரிக்கப்பட்டது. இதையடுத்துவடமாகாண சுகாதார அமைச்சர் உண்ணா விரதம் இருந்தவர்கள் விசமிகள் என்று தெரிவித்து கண்டனம் வெளியிட்டிருந்தார்.

இந்தக்கண்டனத்துக்கு எதிராக நேற்று அமைச்சருக்கு எதிராக காணாமற்போனோரின் உறவுகள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

''புலம்பெயர் தமிழர்களே காசு கறக்க கனடா வரும் சுத்திய அமைச்சரிடம் ஜாக்கிரதை'', ''சம்பந்தன்தீர்வு குழந்தையைப் பெற கஷ்டப்படுகிறார். டாக்குத்தர் நீ போய் வைத்தியம் பார்த்து விடு'', ''செத்த பிணங்கள் எங்களைப் பார்த்து விசமிகள் என்று கூறுவதா?'', ''ஊழல் விசாரணை குழுவில் முன்னிலையாகி முதலில் உன்னை யோக்கியம் என்று நிரூபி'' என பல்வேறு பாதாகைகளை தாக்கிய வண்ணம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இதேவேளை, இது தொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளரிடம் தொடர்பு கொண்ட போது-

அமைச்சர் தற்போது வெளிநாட்டுக்குச் சென்றுள் ளார். அவர் மீண்டும் இலங்கை வந்தமையின் பின்னர் கருத்துத் தெரிவிக்கிறேன் எனக் கூறினார். சுமார் ஒரு மணித்தியாலம் வரை இந்தக் கவன வீர்ப்பு போராட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-100)

# கணிதப் பிரிவில் சவேரியார் முதலிடம்



க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் கணிதப் பிரிவில் புனித சவேரியார் பெண்கள் தேசியப்பாடசாலை மாணவி தயானந்தன் நேஹாசினி கணிதப் பிரிவில் 1ஏ, 2பி பெற்ற நிலையில் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் இணைந்த கணிதத்தில் ஏயும், இரசாயனவியல், பௌதிகம் ஆகிய பாடங்களில் பி பெறுபேறுகளையும் பெற்றுள்ளார். (இ-112)

# தரம் 5 மாணவர்களுக்கு புத்தகங்கள் கையளிப்பு





முல்லைத்தீவு,ஜன.12

முல்லைத்தீவு கல்வி வலையத்துக்கு உட்பட்ட தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தரம் ஐந்து மாணவர்கள் 43 பேருக்கான கடந்தகால புலமைப்பரிசில் வினாவிடை தொகுப்பு புத்தகங்கள் பாடசாலையில் வைத்து கையளிக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாணவர்கள் , பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் 'நாளை முல்லைத்தீவு' அமைப்பின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நிதியுதவியை அந்த அமைப்பின் சர்வதேச இணைப்பாளர்களும் ஆலோசகர்களுமான க.திலீபன், பு.சுரேஸ் ஆகியோர் வழங்கியிருந்தனர்.(இ)


# வெள்ளிமலையில் உள்ளக வீதிகளை புனரமைக்கும் வேலைகள் ஆரம்பம்

மன்னார், ஜன.12

மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச சபைக்கு உட்பட்ட வெள்ளிமலை கிராமத்தின் 6 கிலோமீற்றர் தூரமுடைய உள்ளக வீதிகளைப் புனரமைக்கும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

வெள்ளிமலை கிராமத்தில் சுமார் 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிரந்தரமாக வசித்து வருகின்றன. இந்தநிலையில், மழை காலங்களில் உள்ளக வீதிகளுக்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டு மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார் கள் மற்றும் பாதசாரிகள் பல சிரமங்களை எதிர் நோக்கி வந்தனர்.

இது தொடர்பில் வெள்ளிமலை அபிவிருத்திக் குழு மற்றும் அகில இலங்கை மக்கள் காங் கிரஸ் கட்சியின் கிளையினர் விடுத்த விசேட கோரிக்கையை அடுத்து கடந்த மாதம் அமைச்சர் றிஷாட் பதியுதீன் இந்த வீதியின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைத்தார். (எ)



### நீண்ட காலமாக இயங்காமல் கைவிடப்பட்டிருந்த

# தண்ணிமுறிப்பு அ.த.க. பாடசாலை தற்காலிகமாக வேறு இடத்தில்!

முள்ளியவளை,ஜன.12

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் நீண்ட காலமாகத் தண்ணிமுறிப்பு பகுதியில் இயங்காமல் கைவிடப்பட்டிருந்த தண்ணிமுறிப்பு அ.த.க. பாடசாலை கடந்த 2 ஆம்திகதிமுள்ளியவளை தன்வயல் கிராமத்தில் தற்காலிகமாக கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி உமாநிதி புவனராஜா உத்தியோக பூர்வமாக பாடசாலையைத் திறந்து வைத்தார்.

இந்த பாடசாலைக்கு அதிபர் உட்பட இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.





இதேவேளை, மேற்படி பூதன் வயல் கிராமத்தில் விடுதலைப்புலிகளின் காலத்தில் ஒரு பாடசாலை நிரந்தரமாக இயங்கி வந்தது எனவும் மீள் குடியேற்றத்துக்குப் பிற்பாடு அந்தப் பாடசாலை இருந்த காணியைத் தனிநபர் ஒருவர் அடாத்தாககப் பிடித்து வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதனால் இந்தக் கிராமத்தில் சுமார் 100 இற்கு மேற்பட்ட மாணவர்கள் மிகநீண்ட தூரத்திலுள்ள பாடசால்லைகளில் பல சிரமங்களுக்கு மத்தியில் தமது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்விடயம் தொடர்பாக பிரதேச செயலர் உட்பட அனைத்து உயர்மட்ட அதிகாரிகளுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் காலத்துக்குக் காலம் பொதுமக்கள்முறைப்பாடுகளைச் செய்து வந்துள்ளனர்.

எனினும், இதுவரையும் அக்காணி தொடர்பான ஆக்கபூர்வமான முடிவுகள் எவையும் எடுக்கப் படாத காரணத்தால் தற்காலிகமாக இப்பாடசாலை கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

இப்பாடசாலைக்கான நிரந்தரக் கட்டடத்துக் கான நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதும் காணிப் பிரச்சினையால் அந் நிதி திரும்பக்கூடிய அபாயமும் காணப்படுகிறது.

இதேவேளை, பாடசாலை திறக்கப்பட்டுள்ளபோதும் அதற்கான எந்தவிதமான தளபாடங்களும் வந் தடையாமையால் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் சிரமங்களைஎதிர்கொண்டுள்ளனர்.

(இ-82)

-என்.கண்ணன்

# திஸ்ஸ விதாரணவும் கலப்பு விசாரணையும்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாலோசனை செயலணியின் அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்ட பின்னர், கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும், இரண்டு ஊடக மாநாடுகளை நடத்தியிருந்தார் முன்னாள் அமைச்சரும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

போர்க்காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு விசாரணை நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்ற, கலந்தாய்வு செயலணியின் முக்கியமான பரிந்துரைக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவே அவர் இந்த இரண்டு ஊடக மாநாடுகளையும் நடத்தியிருந்தார்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஓர் இடதுசாரித் தலைவர். சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கத்திலும், மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திலும், அமைச்சராக இருந்தவர்.

அவ்வப்போது, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஒருசில நியாயமான கருத்துக்களையும் முன்வைத்தவர். இப்போது அவர் மஹிந்த ராஜபக்ஷ அணியில் இருக்கிறார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டிருக்க வேண்டிய கலந்தாலோசனை செயலணியின் அறிக்கை கடந்த 3ஆம் திகதி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளிக்கப்பட்ட பின்னர், மறுநாள் அதிகாலையிலேயே இணையத்தளத்தில் பகிரங்கமாக வெளியிடப்பட்டது.

அதற்கு அடுத்தநாள், அதாவது ஜனவரி 5ஆம் திகதி கொழும்பில் ஊடக மாநாட்டை நடத்திய திஸ்ஸ விதாரண, கலந்தாலோசனை செயலணியின் அறிக்கையைத் தாம் நிராகரிக்கிறார் எனவும், இந்தப் பரிந்துரைகளை அரசாங்கமும் நிராகரிக்க வேண்டும் என்றும் கோரியிருந்தார்.

இரண்டு நாள்கள் கழித்து, யாழ்ப்பாணத்திலும் ஓர் ஊடக மாநாட்டை நடத்தி கலப்பு நீதிமன்றப் பரிந்துரை, சர்வதேச தலையீடு உள்ளிட்டவற்றுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

### ல.ச.ச.கட்சியே முதலில் நிராகரிப்பு

கலந்தாலோசனை செயலணியின் அறிக்கை மற்றும் பரிந்துரைகள் வெளியானதும், அதனை முதலாவதாக நிராகரித்த கட்சி திஸ்ஸ விதாரணவின் லங்கா சமசமாஜக் கட்சி தான்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவசரப்பட்டு இந்த பரிந்துரைகளை நிராகரித்திருக்கின்றமையும், முன்னொருபோதும் இல்லாதளவுக்கு யாழ்ப்பாணம் வந்து அவர் ஊடக சந்திப்பை நடத்தி தனது கருத்துக்களை வலியுறுத்தியுள்ளமையும், முக்கியமான விடயம்.

இந்தக் கலந்தாலோசனை செயலணியின் பரிந்துரைகளை மஹிந்த ராஜபக்ஷ கூட இந்தப் பத்தி எழுதப்படும் வரையில் எதிர்க்கவோ நிராகரிக்கவோ இல்லை. அப்படியிருக்கும் போது திஸ்ஸ விதாரண இதற்கு எதிரான கருத்தை முன்வைத்திருக்கின்றமை ஆச்சரியமானது தான்.

அவர் கொழும்பில் நடத்திய, ஊடக மாநாட்டிலும், யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக மாநாட்டிலும் வெளிப்படுத்தியிருந்த சில விடயங்களை அலசுவது தான், இந்தப் பத்தியின் மைய நோக்கம்.

இந்தச் செயலணியின் பரிந்துரை, ஐ.நா. பொதுச் செயலராக இருந்த பான் கீ மூன், 2010இல் அமைத்த மர்சுகி தருஸ்மன் தலைமையிலான நிபுணர் குழுவின் அறிக்கை போல இருப்பதாக திஸ்ஸ விதாரண கூறியிருக்கிறார்.

இப்படிப்பட்ட இந்த அறிக்கையின் பரிந்துரைப்படி, வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணைகளை நடத்தினால், அது கடைசியில், எல்லா அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்களையும் சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதிலேயே முடியும். அவ்வாறு தான் உலகில் பல நாடுகளில் நடந்துள்ளது என்பது அவரது வாதம்.

போரின் போது இராணுவத்தினர் பல்குழல் பீரங்கிகளைப் பயன்படுத்தவில்லை என்றும், குறுந்தூர வீச்சு துப்பாக்கிகளால் தான் தாக்குதல்களை நடத்தினார்கள் என்றும் புலிகளே பொதுமக்களைக் கொன்றனர் என்றும் திஸ்ஸ விதாரண கூறியிருந்தார்.

போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருந்தால், இரண்டு இலட்சம் பேர் காயமடைந்திருக்க வேண்டும் என்பது விஞ்ஞான ரீதியான கணிப்பு என்றும், ஆனால், மேல் மாகாணம் தவிர இலங்கையின் மற்றப் பகுதிகள் அனைத்திலும் கூட, இரண்டு இலட்சம் படுக்கைகள் மருத்துவமனைகளில் கிடையாது என்றும் அவர் ஒரு கருத்தை முன்வைத்திருக்கிறார்.

### விதாரணவின் விசாரணைக் கணிப்பு

போர் ஒன்றில் ஈடுபடும் தரப்புகளின் மத்தியில் மரணமடைவோர் மற்றும் காயமடைவோருக்கு இடையில் ஒரு சீரான விகிதம் இருப்பது வழக்கம். சில சண்டைகளில் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் மற்றும் தந்திரங்களைப் பொறுத்து, அந்த விகித



அமைப்பில் மாற்றங்கள் இருந்தாலும், பொதுவான ஒரு நிலை காணப்படும்.

அதுபோலவே, பொதுமக்கள் வாழ்விடங்களை அண்டி போர் நடக்கின்ற போதும், ஏற்படுகின்ற மரணங்கள் மற்றும் காயங்களுக்கு இடையில் ஒரு விகித அமைப்பு காணப்படும்.

இங்கு திஸ்ஸ விதாரண கூற முனைகின்ற விஞ்ஞானக் கணிப்பு. என்னவென்றால், ஒருவர் மரணமானால், ஐந்து பேர் காயமடைந்திருக்க வேண்டும் என்பது தான். இதனை 1:5 என்பார்கள்.

அதனால் தான், ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் 40 ஆயிரம் பொதுமக்கள் இறுதிப் போரில் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கூறப்பட்டிருந்தமையை வைத்து இரண்டு இலட்சம் பேர் காயமடைந்திருக்க வேண்டும் என்று திஸ்ஸ விதாரண குறிப்பிட்டிருந்தார்.

போரில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர்- எவ்வாறு கொல்லப்பட்டனர் என்ற விவரங்கள் அனைத்தையும் ஒரு நியாயமான நம்பகமான விசாரணை தான் உறுதிப்படுத்த வேண்டும்.

அரசாங்கம் சில தரவுகளை வெளியிட்டது. ஐ.நாவும் சில கணிப்புகளை வெளியிட்டது. ஊடகங்களும் சில ஊகங்களை வெளியிட்டன. ஆனாலும், இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்ட பொதுமக்களின் சரியான எண்ணிக்கை என்ன என்பது ஏழு ஆண்டுகளாகியும் வெளிப்படுத்தப்படாத ஓர் இரகசியமாகவே இருக்கிறது.

நம்பகமான விசாரணை ஒன்றின் ஊடாக இந்தத் தரவுகள் சேகரிக்கப்பட்டு, உறுதிப்படுத்தப்படுவதற்கு ஏன் திஸ்ஸ விதாரணவோ, முன்னைய அரசாங்கமோ இப்போதைய அரசாங்கமோ தயாராக இல்லை?

அப்படியான ஒரு விசாரணையில் இது போன்ற விஞ்ஞானக் கணிப்புகளை முன்வைத்து கேள்விகளை எழுப்பியிருக்கலாம். பல்குழல் பீரங்கிகளை பயன்படுத்தவில்லை என்று நிரூபித்திருக்கலாம். ஆனாலும், அரசதரப்பு அதற்கு ஒருபோதும் தயாராக இருந்ததில்லை.

### உண்மைகள் வெளிவந்து விடும் என்ற அச்சம்

ஏனென்றால் அவ்வாறான ஒரு நம்பகமான விசாரணையில், உண்மைகள் வெளிவந்து விடும் என்ற அச்சம் தான் அதற்குக் காரணம்.

தாம் இறுதிக்கட்டப் போரில் பல்குழல் பீரங்கிகளால் காயமடைந்ததை, தமது உறவுகள் இறந்து போனமையை சாட்சியங்கள் கூறினால், அதனைத் தான் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும் என்ற அச்சத்தால் தான் அத்தகையதொரு விசாரணைக்கு அரசாங்கம் தயங்கி வந்துள்ளது.

போர் இழப்புகள் தொடர்பாகத் தாம் முன்வைக்கும் நியாயங்களின் மீது உண்மையானவை என்ற நம்பிக்கை இருந்தால், அரச தரப்பில் நம்பகமான ஒரு விசாரணை நடத்தப்பட்டிருக்கும். வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புக்குக் கூட யாரும் அஞ்சியிருக்கமாட்டார்கள்.

தாம் உண்மையைத் தான் கூறுகிறோம் என்றால், அந்த உண்மையை யார் முன்பாகவும் முன்வைத்திருக்கலாம். ஆனால் வெளிநாட்டு நீதிபதிகளைக் கண்டு அரச தரப்பு அஞ்சுகின்ற போதுதான், சந்தேகங்கள் எழுகின்றன.

இங்கு வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கும் விடயத்துக்கு எதிர்ப்புக் கிளம்பியிருப்பதற்கு நாட்டின் இறைமையோ அல்லது அரசமைப்பு வரையறையோ காரணம் அல்ல. அச்சம் காரணமாகவே அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கினால், அவர்கள் தீர்ப்பு எழுதும்போது, நாட்டின் நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை குறித்துக் கவனம் செலுத்த மாட்டார்கள், அது நாட்டின் ஐக்கியத்துக்கு ஆபத்தாக முடியும் என்று யாழ்ப்பாணத்தில் கூறியிருந்தார் திஸ்ஸ விதாரண.

இதன் மூலம், நீதிபதி ஒருவர் தீர்ப்பளிக்க முனையும் போது, நீதியைக் கவனத்தில் கொள்ள வேண்டுமா அல்லது சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ள வேண்டுமா என்ற விவாதத்தையே அவர் கிளப்பியிருக்கிறார்.

### நம்பகம் இழந்த இலங்கையின் நீதித்துறை

நீதிபதி ஒருவர் நீதியின் நிலை சார்ந்தே தீர்ப்பை அறிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல், புறக்காரணிகளின் மீது அவர் கவனம் செலுத்தினால், நீதித்துறை மீதான நம்பகம் போய் விடும். இலங்கையின் நீதித்துறை நம்பகம் அவ்வாறு தான் இழக்கப்பட்டது.

அந்த நிலையைத் தான் நம்பகமான- நடுநிலையான நீதித்துறையாக இன்னமும் இலங்கையின் அதிகார வர்க்கம் கொண்டாடுகிறது. திஸ்ஸ விதாரணவும் கூட அத்தகைய ஒருவர் தான் என்பதை இந்தக் கருத்தின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

இதனால் தான், கலப்பு விசாரணையை திஸ்ஸ விதாரண போன்றவர்களால் ஏற்க முடியாதிருக்கிறது. கலப்பு விசாரணையில் உள்நாட்டு நீதிபதிகளும் இடம்பெறுவார்கள். அங்கு வெளிநாட்டு நீதிபதிகளின் ஆதிக்கம் முழுமையாக இருக்காது. ஆனாலும், அதனை ஏற்க அவர்கள் தயாராக இல்லை.

உண்மையும், நேர்மையும், நியாயமும், உள்ள தரப்பு ஒன்று எத்தகைய நீதிபதிகளின் முன்பாகவும், விசாரணையை எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கும்.

இந்த நிலையில், திஸ்ஸ விதாரண போன்ற முன்னைய ஆட்சியாளர்களும், இப்போதைய ஆட்சியாளர்களும் அதனை நிராகரிப்பதன் மூலம் உலகிற்கு ஒப்புக்கொள்வது, தமது பக்கத்தில் நியாயமும் நேர்மையும் இல்லை என்பதைத்தான்.

ஓர் இடதுசாரியின் மனோநிலையே இப்படி என்றால், ஏனைய அரசியல் வாதிகளின் நிலை - எண்ணம்- எப்படி இருக்கும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியது இல்லை.

## புலம்பெயர் இலங்கையருக்கு முதற் தடவையாக ஓய்வூதியம்

கொழும்பு, ஜன.12

வரலாற்றில் முதற் தடவையாக, புலம்பெயர் இலங்கைத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மத்துகம புலம்பெயர் வள நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள இதனைக் கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"வெளிநாடுகளில் வேலை செய்யும் புலம்பெயர் இலங்கைத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

"இந்நிலையில், பதிவு செய்து கொள்ளாத தொழிலாளர்கள் ஓய்வூதிய அனுகூலங்களை இழக்க நேரிடும்.

"வரலாற்றில் முதற் தடவையாக, புலம்பெயர் இலங்கைத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, இதற்கானபதிவுகளைப் பிரதேச செயலகங்களில் மேற்கொள்ள முடியும்.

"தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்து நலன்களைப் பெற்றுக் கொடுப்பதே அரசின் நோக்கம்." -என்றார். (எ)




# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 59

பொன்.வேணு கிருஷ்ணா

CIA என்றால் அமெரிக்கா; அமெரிக்கா என்றால் CIA

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் ரஷ்யா இணையவழியில் ஊடுருவியது என்ற குற்றச்சாட்டுக்கள் மீதான அரசியல் பிரசாரப்புயல், வியாழனன்று



Wikileaks founder Julian Assange denied claims the CIA has taken over his organisation


(The Senate Armed Services Committee heard from three top intelligence officials. CreditStephen Crowley/The New York Times)

( 05. 01.2017) செனட் ஆயுத சேவை கமிட்டியின் முன் விசாரணைக்கு வந்தது டன், ஒரு புதிய உச்சத்தை எட்டியது. மற்றும் அங்கே மூன்று உயர் மட்ட உளவுத் துறை அதிகாரிகள் பல மணி நேரங்களுக்கு சாட்சியம் வழங்கினார்கள். அம்மூன்று அதிகாரிகளும், ஜனநாயகக் கட்சியினது தேசிய கமிட்டிக்குள்ளும் (DNC) மற்றும் கிளிண்டன் பிரசாரக் குழுத் தலைவர் ஜோன் பொடெஸ்டாவின் மின்னஞ்சல்களுக்குள்ளும் ஊடுருவுவதற்கு ரஷ்ய அரசாங்கம் வழிநடத்தியது என்ற வாதங்களுக்கு உகந்த எந்த ஆதாரத்தையும் வழங்க மறுத்தனர்.


(Director of National Intelligence James Clapper Jr. takes his seat to testify before a Senate Armed Services Committee hearing on "Foreign Cyber Threats to the United States" on Capitol Hill, Jan. 5, 2017. Credit: Kevin Lamarque/Reuters)

வியாழனன்று உளவுத் துறை முகாமைகள் ஜனாதிபதி ஒபாமாவுக்கு வழங்கிய 50 பக்க அறிக்கையிலும் அது போன்ற எந்த ஆதாரமும் வழங்கப்படவில்லை, இதைத் தொடர்ந்து வெள்ளியன்று (06.01.2017) காங்கிரஸ் தலைவர்கள் மற்றும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ரொனால்ட் ட்ரம்ப்


Director of National Intelligence James Clapper testifies before a Senate Armed Services Committee hearing on for eign cyber threats, on Capitol Hill in Washington. REUTERS/Kevin Lamarque

இன் விளக்கவுரைகள் வர விருந்தன.

திங்களன்று(09.01.2017) பொதுப் பார்வைக்குப் பகிரங்கமாக வெளியிடப்பட இருக்கும் பதிப்பு ஒருபுறம் இருக்கட்டும், இரகசிய அறிக்கையிலும் கூட எந்தவொரு பெரிய புதிய அதிரடியான பகிரங்கப்படுத்தல் ஏதுவும் இல்லையென அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர் என்று வாஷிங்டன் போஸ்ட் அறிவித்தது.

**ஊடுருவலை "ஒரு போர் நடவடிக்கையாக"வர்ணித்தல்**

இது, குற்றஞ்சாட்டப்படும் ஊடுருவலை 'ஒரு போர் நடவடிக்கையாக' வர்ணிப்பதிலிருந்து ஆயுத சேவைகள் கமிட்டித் தலைவர் செனட்டர் ஜோன் மெக் கெயினைத் தடுத்துவிடவில்லை, மேலும் உளவுத்துறை அதிகாரிகள் அந்த வார்த்தையைப்பிரயோகிக்கவேண்டுமென அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார்-அமெரிக்காவும் ரஷ்யாவும், அவற்றுக்கு இடையே, உலகின் அணு ஆயுதங்களில் 95 சதவீதத்துக்கும் அதிகமானவையைக் கட்டுப்பாட்டில் கொண்டுள்ள நிலையில், இந்த விதமான மொழிநடை மிகவும் அச்சுறுத்தலான தாக்கங்களைக் கொண்டதாகும்.


(அமெரிக்க ஆயுத சேவைகள் கமிட்டித் தலைவர் செனட்டர் ஜோன் மெக் கெயின்)

**ரஷ்யா தான் ஆதாரம் என்பதை விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் ஜூலியன் அசான்ஜ் பகிரங்கமாக மறுத்திருக்கிறார்**


The Ecuadorian government has cut the internet access of WikiLeaks founder Julian Assange, shown here in February 2016, who lives in the country's embassy in London (AFP Photo/Jack Taylor)

மெக்கெயினின் ஆத்திரமூட்டும்கருத்துரைகளையே கமிட்டியின் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் எதிரொலித்தனர், ட்ரம்ப் அவரது டுவீட்டர் கருத்துரையில், ரஷ்யா சம்பந்தப்பட்டிருப்பதற்கான எந்தவித ஆதாரமும் வழங்கப்பட வில்லை என்றும், ஜனநாயகக் கட்சி மின்னஞ்சல்க ளைத் தனது அமைப்புப் பகி ரங்கமாக வெளியிட்டதற்கு ரஷ்யா தான் ஆதாரம் என்பதை விக்கிலீக்ஸ்ஸ்தாபகர்ஜூலியன் அசான்ஜ் பகிரங்கமாக மறுத்திருக்கின்ற மையும் ட்ரம்ப் அவரது டுவீட்டரில் குறிப்பிட்டமைக்காக அவர்கள் அவரை விமர்சித்தனர்.

குற்றஞ்சாட்டப்படும் ஊடுருவலை அணுஆயுத மேந்திய ரஷ்யாவுடனான மறைமுகப் போருக்கு ஒரு போலிக் காரணமாக மாற்றுவதற்கான இந்த இடைவிடாத பிரசாரம் நிலவுகின்ற நிலையில், நாம் யதார்த்தம் என்னவென்று பார்ப்போம். ஜனநாயகக் கட்சியின் தேசிய கமிட்டி மற்றும் கிளிண்டன் பிரசாரக் குழு குறித்து உண்மையில் இந்த ஊடுருவல் என்னதான் வெளியிட்டது?

**விக்கி‧லீக்ஸ் வெளியிட்ட அந்த ஆவணங்கள் இரண்டு முக்கிய முகப்புகளை அம்பலப்படுத்தின**

விக்கிலீக்ஸ் வெளியிட்ட அந்த ஆவணங்கள் 2016 ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் இரண்டு முக்கிய முகப்புகளை அம்பலப்படுத்தின: ஒன்று, ஜனநாயகக் கட்சியின் தேசிய கமிட்டித் தலைமையானது பேர்ணி சாண்டர்ஸ் பிரசாரத்தைத் திட்டமிட்டு அடிபணியச் செய்வ




தற்கு, கிளிண்டனுக்கு ஆதரவாக மோசடி செய்தது; அடுத்தது, கோல்டுமன் சாச்ஸ் மற்றும் ஏனைய வோல்ஸ்ட்ரீட் நிறுவனங்களுக்கு அவர் வழங்கிய உரைகளின் எழுத்துப் பிரதிகளில் ஆவணப் படுத்தப்பட்டிருந்தவாறு, நிதியியல் பிரபுத்துவத்துக்கு கிளிண்டன் வெட்கக்கேடாக அடிபணிந்திருந்தார்.

வாக்களிப்பு நடைமுறையில் மின்னணு முறையில் குறுக்கீடு செய்து ஒரேயொரு கள்ள வாக்கோ அல்லது நடத்தை விதி மீறிய வாக்கோ இடப்பட்டதுக்கு அங்கே எந்த ஆதாரமும் கிடையாது என்று அமெரிக்க உளவுத்துறை முகாமைகளே கூறியுள்ளன என்றாலும், தேர்தலில் ஊடுருவல் என்ற பதம் பிரயோகிக்கப்படுகிறது. கிளிண்டனின் பிரசாரத்தை மதிப்பிழக்க வைத்த நடவடிக்கைகளான, ஜனநாயகக் கட்சி நிர்வாகிகள் மற்றும் கிளிண்டனின் நடவடிக்கைகள் குறித்த உண்மையான தகவல்கள்வெளியானமையே, குற்றஞ்சாட்டப்படும் ஊடுருவலின் ஒரே விளைவாக உள்ளது. இதைத்தான் ஜனநாயகக் கட்சியினரும் மற்றும் அவர்களது ஊடக ஆதரவாளர்களும் நசுக்க விரும்புகிறார்கள்.

கேள்விக்குள்ளாகும் 'குற்றம்', ஜனநாயகக் கட்சியின் தேசியக் கமிட்டி மற்றும் பொடெஸ்டாவின் ஆவணங்கள் ஊடுருவப்பட்டிருக்கின்றமை அல்ல, மாறாக அதைப்பகிரங்கப்படுத்த விக்கி லீக்ஸுக்கு வழங்கப்பட்டி ருப்பது தான் என்று பத்திரிகைச் செய்திகள் வியாழனன்று மறுப்பின்றி ஒப்புக் கொண்டன. குற்றஞ்சாட்டப்படும் ரஷ்ய ஊடுருவல்குழு ஜனநாயகக் கட்சியின் தேசிய கமிட்டி, ஜனநாயகக் கட்சியின் காங்கிரஸ் பிரசார கமிட்டி மற்றும் பொடெஸ்டாவின் மின்னஞ்சல்களை எடுத்தமை என்பதற்காக மட்டுமல்ல, மாறாக அவற்றைப் பகிரங்கமாக வெளியிட்டிருப்பதற்காகவும் குற்றஞ்சாட்டப் படுகிறது, இந் நடவடிக்கை "நீண்ட காலமாக நடந்து வரும் உளவு வேலை நடவடிக்கையை, தேர்தலில் செல்வாக்குச் செலுத்துவதற்கான ஒரு முயற்சியாக மாறியிருப்பதற்கு" ஒப்பானதாகும் என்று நியூயோர்க் டைம்ஸ் எழுதியது.

அரசாங்கங்கள் வழமையாக ஒன்றையொன்று உளவுபார்க்கின்றன, மற்றும் அமெரிக்காவும் கூட ரஷ்யா, சீனா மற்றும் இந்தியா போன்ற அரசுகளை உளவு பார்க்கிறது என்றுதான் நாம் முன் நிர்ணயம் செய்வோம்.


(Former KGB officer Sergei Ivanov meets with former CIA director Robert Gates, April 2007

"இங்கே உளவு நடவடிக்கைகள், விக்கிலீக்ஸ் மற்றும் ஊடக செய்திகள் வழியாகக் குற்றகரமான விதத்தில் பொதுமக்களுக்குத் தகவல்களைவழங்கச்சென்றுள்ளது என்பது தான் வித்தியாசப் படுகிறது" என்பதைவாஷிங்டன் போஸ்ட் கட்டுரையாளர் ஒப்புக் கொள்கிறார்.

மூடிமறைக்காமல் கூறுவதானால், அமெரிக்க ஆளும் உயரடுக்கை பொறுத்தவரையில்: உண்மையில் தகவலை கசியவிட்டவர் அல்லது ஊடுருவியவர் யாராக இருந்தாலும், அந்த யாரோவொருவர், அவர்கள் கட்சிக்குள் சாண்டர்ஸை ஆதரித்த உறுப்பினர்களது ஜனநாயக உரிமைகளுக்கு எதிரான ஜனநாயகக் கட்சியின் சூழ்ச்சிகளையும், மற்றும் அக்கட்சி ஸ்தாபகத்தின் விருப்பமான வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன் மூல மாக வெளிப்பட்ட வர்க்க நலன்களையும் எடுத்துக்காட்டிய அத்தகவல்களை அமெரிக்க மக்கள் பெறுவதற்கு வழங்கிவிட்டாரே என்பதுதான் நிஜமான 'குற்றமாக' இருக்கிறது.

(கேள்வி தொடரும்...)



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.





# தமிழ்த் தேசிய எழுச்சி

24

## விடுதலைப் புலிகளுக்கு இந்திய இராணுவப் பயிற்சி

1983 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில்,சென்னை மீனாம்பாக்கம் விமான நிலையத்தில் நாம் வந்திறங்கியபோது விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான பேபி சுப்பிரமணியம் (இளங்குமரன்) எம்மை வரவேற்றார்.சென்னை நகரில் 'வூட்லண்ட்ஸ்' எனப்படும் நடுத்தரமான சைவ விடுதியில் நாம் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நேசன்(ரவி பரமநாதன்) மற்றும் சில மூத்த உறுப்பினர்கள் அந்த விடுதியில் எம்மைச் சந்தித்தனர். அவ்வேளையில், சென்னையில் எமது இயக்கத்துக்கெனச் செயலகமோ அல்லது இரகசிய வீடுகளோ இருக்கவில்லை. எமது அறைக்குப் பக்கமாக இன்னோர் அறையும் எடுத்து, அவ்விரு அறைகளையும் அரசியற் செயலகமாக மாற்றிச் சிறிது காலமாக அவ்விடுதியிலிருந்தே நாம் செயற்பட்டோம். பேபி சுப்பிரமணியத்தின் நண்பரும் அ.தி.மு.க.ஆட்சியில் மூத்த அமைச்சருமான காளிமுத்து, நாம் ஒரு செயலகம் அமைக் கும் வரை விடுதியின் செலவினங்கள் அனைத்தையும் பொறுப்பெடுத்தார். அந்த விடுதியில் இருந்தபடியே இந்திய இராணுவப் பயிற்சித் திட்டம் பற்றித் தகவல் அறிய முனைந்தோம். தமிழ்நாட்டு அரசியல் வாதிகளுக்கு விவரம் எதுவும் தெரியவில்லை. அவ்வேளை, எனக்கு முன்பு அறிமுகமான தமிழ் நாட்டுப்பத்திரிகையாளர் ஒருவரைச் சந்தித்தபோது அவரிடம் இந்தியப் பயிற்சித் திட்டம் பற்றிக் கேட்டேன். இந்தியப் புலனாய்வுத் துறையி னரே (றோ) இப்பயிற்சித் திட்டத்தைப் பொறுப்பேற்று நடத்துவர் எனக் கூறிய அந்தப் பத்திரிகையாளர், என்னைறோ அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளு மாறு ஆலோசனை கூறினார் . அவ்வேளை, சென்னையில் 'றோ' அதிகாரிகளின் செயற்பாடுகள் மிகவும் இரகசியமானவையாக இருந்தமையால் அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது சிரமமாக இருந்தது. அந்தச் சூழ்நிலையில்தான் எனக்கு முன்பு அறிமுகமான கலாநிதி இராஜேந்திரனைச் சந்தித்தேன். வல்வெட்டித் துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இராஜேந்திரன், எமது இயக்கத்தின் ஆதரவாளர். சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்தின் முழு விவ்ரங்களுடனும் வூட்லண்ட்ஸ் விடுதிக்கு வந்து என்னைச் சந்தித்தார். தமிழீழவிடு தலை இயக்கம் (ரெலோ),ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி. ஆர்.எல்.எப்), ஈழப்புரட்சி இயக்கம்(ஈரோஸ்) ஆகிய மூன்று அமைப்புகளுக்கும் இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்தில் அனுமதி கிடைத்திருப்பதாகத் தெரிவித்த இராஜேந்திரன், இந்த அமைப்புகளைச் சேர்ந்த போராளிகள் ஏற்கனவே வட இந்தியாவிலுள்ள இராணுவப் பயிற்சி முகாமுக்குச் சென்று கொண்டிருக்கின்றனர் எனச் சொன்னார். இந்தியப் புலனாய்வுத் துறையினரே (றோ) இந்தப் பயிற்சித் திட்டத்துக்குப் பொறுப்பானவர்கள் என்றும் கூறினார் காலஞ்சென்ற எஸ். ஜே.வி. செல்வநாயகத்தின் மகன் சி.சந்திரகாசனே இப் பயிற்சித் திட்டத்துக்கு இணைப் பாளராக முக்கிய பங்கு வகிக்கிறார் என்றும் அவர் கூறினார்.


> "தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் சந்திரகாசனுக்கு முக்கிய தலைமைப்பீடப் பொறுப்பைப் பெற்றுக் கொடுப்பதே இந்தியப் புலனாய்வுத் துறையினரது இரகசியத் திட்டம் என்பதையும் இராஜேந்திரன் வெளியிட்டார். இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்துக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் சிபாரிசு செய்யச் சந்திரகாசன் தயாராக இருக்கிறார் எனக் கூறிய இராஜேந்திரன், அதற்கு ஒரு முக்கிய நிபந்தனை உண்டு என்றார். அந்த நிபந்தனை என்னவென்று கேட்டேன். அதற்கு அவர் கூறிய பதில், எனக்கு ஒரு புறம் ஆச்சரியத்தையும் மறுபுறம் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. அதாவது, தமிழீழத் தேசிய விடுதலை இயக்கத்தின் அரசியல் தலைவராகச் சந்திரகாசனை பிரபாகரன் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதே அந்த நிபந்தனை. "



தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் சந்திரகாசனுக்கு முக்கிய தலைமைப்பீடப்பொறுப்பைப் பெற்றுக் கொடுப்பதே இந்தியப் புலனாய்வுத் துறையினரது இரகசியத் திட்டம் என்பதையும் இராஜேந்திரன் வெளியிட்டார். இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்துக்கு விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் சிபாரிசு செய்யச் சந்திரகாசன் தயாராக இருக்கிறார் எனக் கூறிய இராஜேந்திரன், அதற்கு ஒரு முக்கிய நிபந்தனை உண்டு என்றார். அந்த நிபந் தனை என்னவென்று கேட்டேன். அதற்கு அவர் கூறிய பதில், எனக்கு ஒரு புறம் ஆச்சரியத்தையும் மறுபுறம் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. அதாவது, தமிழீழத் தேசிய விடுதலை இயக்கத்தின் அரசியல் தலைவராகச் சந்திரகாசனை பிரபாகரன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. இந்திய இராணுவப்பயிற்சி முடிவு பெற்றதும் எல்லாத் தமிழ்ப் போராளி அமைப்புகளும் 'தமிழ்த் தேசிய இராணுவம் ' ஆக மாற்றப்படுமென்றும், அந்தத் தமிழ் இராணுவம் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் வேளை, தமிழர் தேசத்தின் அரசியல் போராட்டத்தை சந்திரகாசன் தலைமை தாங்கி நடத்துவார் என்றும் இராஜேந்திரன் விளக்கினார். எமது கலந்துரையாடலை மிகவும் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்த எனது மனைவி அடேல், சந்திரகாசனின் நிபந்தனையை அறிந்ததும் பொறுமையிழந்து இராஜேந்திரன் மீது சீறி விழுந்தார்.''எந்தக் காலத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் பிரபாகரனோ அல்லது எமது போராளிகளோ சந்திரகாசனைத் தலைவராக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இதுதான் நிபந்தனை என்றால் எமது இயக்கத்துக்கு இந்திய இராணுவப் பயிற்சி அவசியமில்லை'' என்று கடிந்து கொண்டார் அடேல். இதனைத் தொடர்ந்து இராஜேந்திரனுக்கும் எமக்கும் மத்தியில் சூடான விவாதம் எழுந்தது. அடேலின் கருத்தை ஆதரித்து நான் வாதிட்டேன். சந்திரகாசனின் ஆசியைப் பெறாமல் 'றோ' அதிகாரிகளை நெருங்க முடியாது என்றும் 'றோ' அதிகாரிகளின் சிபாரிசு இன்றி விடுதலைப்புலிகளுக்கு இந்திய இராணுவப்பயிற்சி கிடைக்கப் போவதில்லை என்றும் இந்தப் பயிற்சி கிடையாது போனால் புலிகள் இயக்கம் பின்னடைவை எதிர்நோக்க ஏனைய அமைப்புக்கள் வளர்ந்து முன்னேற்றம் அடையும் என்றும் இராஜேந்திரன் பூச்சாண்டி காட்டினார். சந்திரகாசனின் உதவி யின்றி இந்தியப் பயிற்சியை நாம் எப்படியோ பெற் றே தீருவோம் என நான் எதிர்த்து வாதாட, தனது முயற்சி பலிக்கப் போவதில்லை என்பதை உணர்ந்து கொண்ட இராஜேந்திரன் ஆத்திரத்துடன் எமது அறையிலிருந்து வெளிநடப்புச் செய்தார். அதற்கப்புறம் நான் அவரைக் கண்டதேயில்லை.

இராஜேந்திரனுடன் நிகழ்ந்த சந்திப்புப் பற்றியும் இந்திய இராணுவப் பயிற்சியை ஒழுங்கு செய்வதில் சந்திரகாசன் வகிக்கும் பங்கு பற்றியும்,பயிற்சி திட்டத்தில் இடம்பெற அவர் விதிக்கும் நிபந்தனை பற்றியும் சகல விவரங்களையும் நான் உடனடியாகப் பிரபாகரனுக்குத் தெரியப்படுத்தினேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் சந்திரகாசனின் உதவியை நாட வேண்டாம் எனத் தெரிவித்த பிரபாகரன், எப்படியாவது முயன்று இந்தியப் புலனாய்வுத் துறையினருடன் என்னை நேரடித் தொடர்புகளை ஏற்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். இது எனக்கு ஒரு சிக்கலான சவாலாக அமைந்தது. சந்திரகாசனை வெட்டியோடி, தலைமறைவாக இயங்கும் 'றோ' அதிகாரிகளுடன் தொடர்பை ஏற்படுத்துவது எங்ஙனம்? இப்படியாக நான் இடர்பட்டுக் கொண்டிருந்த வேளையில்தான் எனக்குத் தமிழக உள்நாட்டுப் புலனாய்வுத் துறையினரது தொடர்பு கிடைத்தது. அப்பொழுது நாம் சென்னை நகரப் புறத்திலுள்ள சன்தோம் என்னுமிடத்தில் வீடு ஒன்றை வாடகைக்கு அமர்த்தி இருந்தோம். நாங்கள் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சார்ந்தவர்கள் என அறிந்ததும் தமிழகப் புலனாய்வுத்துறை (கியூ பிரிவு) உதவிப் பொலிஸ் மா அதிபர் அலெக்ஸ்சாந்தர் என்னைத் தனது அலுவலகத்துக்கு அழைத்து ஈழத் தமிழர் பிரச்சினை பற்றியும் விடுதலைப் புலிகளின் போராட்டங்கள் பற்றியும் விசாரித்தார். மாறிமாறி நிகழ்ந்த சந்திப்புக்கள் நட்புறவாகப் பரிணமித்தன. அன்பும் பண்பும் ஆழ மான அரசியல் தெளிவும் கொண்ட வராக விளங்கினார் அலெக்ஸ்சாந்தர். இலங்கை அரசியல் பற்றியும் தமிழரின் விடுதலைப் போராட்டம் பற்றியும் நிறைய அறிந்து வைத்திருந்தார். இந்திய இராணுவ பயிற்சித் திட்டம் பற்றியும் 'றோ' அதிகாரிகளுக்கும் சந்திரகாசனுக்கும் இடையிலான இரகசிய உறவு பற்றியும் எந்தெந்த அமைப்புகளுக்கு எங்கெல்லாம் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன என்பது பற்றியும் சகல விவரங்களையும் நான்அலெக்ஸ் சாந்தர் வாயிலாக அறிந்து கொண்டேன்.

(தொடரும்...)



# தகவலறியும் உரிமைச்சட்டம் பெப்.3 இல் வர்த்தமானியில்

கொழும்பு, ஜன.12

தகவலறியும் உரிமைச் சட்டம் எதிர்வரும் பெப்ரவரி 3 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளது என்று ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியானதன் பின் ஒவ்வொரு பிரஜைக்கும் தமக்குத் தேவையான எந்த வொரு தகவலையும் எந்தவொரு அரச நிறுவனங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு தகவல்களை வழங்கும் அனைத்து அரச நிறுவனங்களினதும் அதிகாரிகளையும் ஓரிடத்துக்கு அழைத்து நியமனங்கள் வழங்கப்பட்டதன் பின்னர் இந்தச் செயற்பாடு ஆரம்பமாகும் என்று அமைச்சர் கூறினார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த இந்தச் சட்டமூலம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# குளிரான காலநிலை தொடர்வதால் இன்புளுவன்ஸா தாக்கம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன.12

நாட்டில் நிலவும் குளிரான காலநிலை காரணமாக இன்புளுவன்ஸா நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது என சுகாதாரத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கர்ப்பிணிகள் மற்றும் சிறுபிள்ளைகளுக்கு இன்புளுவன்ஸா நோய்த்தாக்கம் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன என்று குடும்பநல சுகாதாரப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் கபில ஜயரத்ன தெரிவித்தார்.

காலநிலை மாற்றமடைந்து வருகின்றது எனவும் இந்தக் குளிரான காலநிலையால் நாட்டில் நோய்த் தாக்கங்கள் அதிகரிப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:

''அண்மைக்காலமாக இன்புளுவன்ஸா வைரஸ் தாக்கம் அதிகரித்து வருகின்றது. கர்ப்பிணித் தாய்மார்கள் சிறுவர்களையும் தாக்கும் இந்த வைரஸ், வயதானவர்களை அதிகம் தாக்குவதற்கு வாய்ப்புள்ளது''.

அத்துடன் சளி, இருமல் போன்ற நோய் அறிகுறிகள் அதிகம் ஏற்படும்.

இவ்வாறான நிலைமைகள் குறித்து அதிக அவதானத்துடன் செயற்படுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

# கடலில் மூழ்கிய இளைஞர் பரிதாபகரமாக உயிரிழப்பு

கொழும்பு, ஜன.12

வெலிகம - புதிய வீதி அருகில் கடற்பரப்பில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

காலி - மாதுவத்த பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு நேற்று முன்தினம் மாலை உயிரிழந்தவராவார்.

அந்த இளைஞர் மேலும் சில இளைஞர்களுடன் நீராடிக் கொண்டிருந்தபோதே இவ்வனர்த்தம் ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (எ)

# இலங்கையில் பிரமாண்டமான இரட்டை வர்த்தகக் கட்டடம்

கொழும்பு, ஜன.12

இலங்கையில் World Export Centre என்ற பெரிய இரட்டை கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் பெரும்பாலான பல்வகைப்படுத்தப்பட்ட மற்றும் ஏற்றுமதியில் கூடுதல் வணிக மதிப்புக் கொண்ட முன்னோடி வணிகக் கூட்டு நிறுவனமாக ஹேலிஸின் புதிய திட்டமாக இந்த World Export Centre இரட்டை கட்டட நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

உலகளாவிய ரீதியில் பிரபலமான கட்டடக்கலையை இலங்கையினுள் பிரபலப்படுத்தும் வகையில் நிர்மாணிக்கப்படும் இந்த இரட்டைக் கட்டடம் தலா 55 மாடிகளைக் கொண்டுள்ளது.

இந்தக் கட்டடத்தில் 20 ஆயிரம் ஊழியர்களுக்குச் சேவைவசதி வழங்கப்படவுள்ளது. 2 ஆயிரம் மோட்டார் வாகனங்கள் நிறுத்தக் கூடிய வகையில் வாகன நிறுத்துமிடம் மற்றும் பிறவசதிகளுக்காக 3 மாடிகளும் உள்ளடக்கப்படவுள்ளன என்று குறிப்பிடப்படுகின்றது. (எ)

# நாணயத் தாள்களுடன் ஈரான் பிரஜை கைது

கொழும்பு, ஜன.12

இலங்கையிருந்து 2 கோடி 80 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான வெளிநாட்டு நாணயத் தாள்களை சட்டவிரோதமாகக் கொண்டுசெல்ல முற்பட்ட ஈரான் பிரஜை ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

ஈரான் பிரஜை தனது பயணப்பையில் குறித்த பணத் தொகையை மறைத்து வைத்துக் கட்டு நாயக்க விமான நிலையம் ஊடாகக் கட்டாருக்குக் கொண்டு செல்ல முற்பட்டார். இதன் போது சுங்கத் திணைக்கள அதிகாரிகளுக்குச் அவர் மீது சந்தேகம் ஏற்பட்டதால் அவரின் பயணப்பையை சோதனை செய்தனர். இதன் போது அதில் 2 இலட்சத்து 77 ஆயிரம் யூரோ நாணயத் தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதையடுத்து ஈரான் பிரஜை கைது செய்யப்பட்டார்.

இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர். (எ)

# மலையகத்தில் கடும் வறட்சி; நீர் வழங்கலில் கட்டுப்பாடு

ஹற்றன், ஜன.12

மலையகத்தில் நிலவும் வறட்சி காரணமாக ஹற்றன் மற்றும் கொட்டகலை ஆகிய பகுதிகளில் நீர்வழங்கல் மட்டுப்படுத்தப்படவுள்ளது எனத் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

வறட்சியான காலநிலையால் சிங்கமலை நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் குறைவடைந்துள்ளமையே இதற்குக் காரணம் என்று அந்தச் சபையின் ஹற்றன் நுகர்வோர் சேவை நிலையத்துக்குப் பொறுப்பான சஞ்ஜீவ அபேதீர சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்திப் போதுமான அளவு நீரைச் சேமிக்குமாறும் அவர் பிரதேசவாசிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

## தினசரி ராசி பலன் 12.01.2017

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 10.30 – 11.30 |
| ராகு காலம் | : 01.30 – 3.00 |
| குளிகன் | : 9.00 – 10.30 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சமநோக்கு நாள்

**மேஷம்:** நன்மை - நீண்டநாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பலவும் கிடைக்கும்.

**ரிஷபம்:** அனுகூலம் - எதிர்பாராதவர்களின் வருகையால் ஆதாயம் கூடும் நன்னாள்.

**மிதுனம்:** பொறுமை - நிதானத்தைக் கடைப்பிடித்து நிம்மதியை நாடும் நாள்.

**கடகம் :** போட்டி - இன்று தொழில் முறையில் போட்டிகள் நிலவும்.

**சிம்மம் :**விருத்தி - இன்று எடுக்கும் அனைத்து விடயங்களும் வளர்ச்சி பெறும்.

**கன்னி:** வரவு - இன்று எதிர்பாராத வகையில் வரவுகள் வரும் நாள்.

**துலாம்:** தேர்ச்சி- பல விஷயங்களில் அனுபவம் கிடைக்கும் நன்னாள்.

**விருச்சிகம்:** சிக்கல் - இன்று உங்களுக்குச் சந்திராஷ்டமம் என்பதால் வீண் அலைச்சல்களும் மன உளைச்சல்களும் சிக்கலை உண்டாக்கும்.
சந்திராஷ்டமம் : கேட்டை

**தனுசு:** இரக்கம் - இன்று உங்களின் இதயத்தில் இரக்கம் மிகும் நன்னாள்.

**மகரம்:** சாந்தம் - மனக் குழப்பங்கள் குறைந்து வாழ்வில் சாந்தம் காண்பீர்கள்.

**கும்பம்:** ஜெயம் - எடுத்த காரியங்கள் யாவிலும் ஜெயம் உண்டாகும் நன்னாள்.

**மீனம்:** ஆதாயம் - எதிர்பாராதவர்களின் வருகையால் ஆதாயம் கூடும் நாள்.

# இலங்கையில் கால் பதிக்கின்றது 'அகரம்' கல்வி அறக்கட்டளை!

கொழும்பு, ஜன.12

பிரபல தென்னிந்திய நடிகர் சூர்யாவின் 'அகரம்' கல்வி அறக்கட்டளை அமைப்பு இலங்கையிலும் தமது பணிகளை விஸ்தரிக்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா உள்ளிட்ட சில நாடுகளில் கல்வி ரீதியான உதவிகளை வழங்கி வரும் நடிகர் சூர்யாவின் தொண்டு நிறுவனமான 'அகரம்' அறக்கட்டளை வருடாந்த ஒன்றுகூடல் தமிழகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு அந்த அமைப்பின் அழைப்புக்கு இணங்க இலங்கை கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் கலந்து கொண்டார்.



இதன்போது இந்த அமைப்பின் செயற்பாடுகளை இலங்கையிலும் விஸ்தரிப்பது தொடர்பில் அந்த அமைப்பின் நிர்வாகிகள் கல்வி இராஜாங்க அமைச்சருடன் கலந்துரையாடினர் என்று தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்காக இந்தியாவில் இருந்து குழு ஒன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 'அகரம்' அறக்கட்டளை 2006ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி நடிகர் சூர்யாவால் ஆரம்பிக்கப்பட்டதோடு, இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட வசதியற்ற மாணவர்கள் இந்த அமைப்பின் ஊடாகப் பயன்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

### பிரான்ஸில் அண்மையில் நடைபெற்ற

# மாவீரர் நினைவு சுமந்த சதுரங்கப் போட்டிகள்



பாரிஸ், ஜன.12

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் உப கட்டமைப்புகளில்ஒன்றானதமிழர்விளையாட்டுத்துறை ஆண்டுதோறும் நடத்துகின்ற (2017) மாவீரர் நினைவு சுமந்த கரம், சதுரங்கப் போட்டிகள் கடந்த 8 ஆம் திகதி பாரிஸின் புறநகர்ப் பகுதியில் ஒன்றான நந்தியார் பிர தேசத்தில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக காலை 9.30 மணிக்கு பொதுச் சுடரை பிரான்ஸ் தமிழர் விளையாட்டுத்துறையின் செயலாளர் நிமலன் ஏற்றி வைத்தார். ஈகச் சுடரை 20.09.1995 அன்று காங்கேசன்துறை கடற்பரப்பில் வீரகாவியமாகிய கடற்கரும்புலி மேஜர் நகுலனின் சகோ தரர் ஏற்றி வைத்தார். தொடர்ந்து அகவணக்கம் செலுத் தப்பட்டது.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பாக நிர்வாக உறுப் பினர் பாலசுந்தரம் தனதுரையில் தெரிவித்தவை வருமாறு;

''ஒவ்வோர் ஆண்டும் எமது தேசத்துக்காக உயிர் நீத்த மாவீரர்களை நினைவு சுமந்து எமது எதிர்கால சந்ததியினர் அனைத் துத்துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும். அதற்காக அவர்களுக்குப் பக்க பல மாகவிருந்து ஒவ் வொரு துறைகளையும் வளர்த்தெடுக்க வேண்டும். அந்த நோக்கத் தையும் எமது முன் னெடுப்புக் களையும் புரிந்து கொண்டு தமிழர் விளையாட்டுத் துறையின் பின்னால் அணி திரண்டு நிற்கும் அனைத்து விளையாட்டுக் கழ கங்களையும் போட்டியாளர்களையும் வீரர்களையும் நன்றியோடு கரம் பற்றிக் கொள்கின் றோம்.'' என்றார். (எ)



# 'வாகை மயில்' நடனப் போட்டி சிறப்புற நிகழ்ந்தது ஜேர்மனியில்!

ஜேர்மனியில் நடனக் கலை பயில் வோருக்குக்களம் அமைத்துக் கொடுத்து, அவர்களது திறமைகளை வெளிக் கொண்டு வரும் நோக்கில் நாடுதழுவிய ரீதியில் வாகைமயில் என்னும் மாபெரும் பரதநாட்டிய நடனப் போட்டி கடந்த மாதம் வூப்பெற்றால் நகரில் வூப்பர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு தமிழ்ப் பெண்கள் அமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்டு மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.

தமிழ்க்கலைக் கூடங்கள் மற்றும் நடனக் கலை பயில்வோர் தமது கலை ஆற்றல்களை வெளிப்படுத்தும் நோக் கில் 150இற்கு மேற்பட்ட நடனக் கலை ஞர்கள் இந்தப்போட்டியில் பங்குபற்றி சிறப்பித்திருந்தனர்.

ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, அதி மேற்பிரிவு என வயதுப்பிரிவுகளுக்கு ஏற்ப பிரிக்கப் பட்டு தனி நடனம், குழுநடனம் எனப் போட்டிகள் நடத்தப்பட்டன. அத்துடன் நாட்டிய நாடகமும் போட்டி நிகழ்வாக நடைபெற்றது.

அரங்கு நிறைந்த பார்வையாளர் களின் மத்தியில் சிறப்பாக நடைபெற்ற இந்த மாபெரும் நடனப்போட்டியில் பங்கு பற்றிய அனைத்துக் கலைஞர் களுக்கும் சான்றிதழும், பதக்கமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

வெற்றி பெற்ற கலைஞர்களுக்கு







விருதுகளும், அதிசிறந்த நடனக் கலை ஞர்களுக்கு வயதுப் பிரிவுப்படி 'வாகை மயில் விருதும்' வழங்கி மதிப்பளிக்கப் பட்டது. (எ)








# ஜேர்மனி தமிழர் கலாசார ஒன்றியம் நடத்திய புத்தாண்டுக் கலைவிழா





பேர்ளின், ஜன.12

ஜேர்மனி தமிழர் கலாசார ஒன்றியத்தால் வருடாந்தம் நடத்தப்படும் புத்தாண்டுக் கலைவிழா நூரன் பேர்க் நக ல் கடந்த 7 ஆம் திகதி இளையோர்களால் நடத் தப்பட்டது.

இதில் விடுதலைக் கானங் களுடன் இசைக் கச்சேரி, விடு தலை நட னங்கள், திரையிசை நடனங்கள், பரதக்கலை நட னங்கள், சுதந்திரம் நோக்கிய அரசியற் பார்வையுடனான சிறப்புரை ஆகியன இடம்பெற் றன.

நிகழ்வில் நூரன்பேர்க் அரசி யல் பிரமுகர்கள், பல்லின மக்கள் கலாசார ஒன்றியப் பொறுப்பாளர்கள் விருந்தி னர்களாகக் கலந்துகொண்ட னர். (எ)

# பொருளாதாரச் சீர்திருத்தங்கள் தொடரும்!

## பிரதமர் நரேந்திர மோடி தெரிவிப்பு

காந்திநகர், ஜன.12

பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு இந்திய மத்திய அரசு உறுதிபூண்டுள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம், காந்தி நகரில் 'எழுச்சிமிகு குஜராத் சர்வதேச மாநாடு' நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் மோடி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தியாவில் வர்த்தகத்துக்கான உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும், இந்தியாவுக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்கும் நான் முன்னுரிமை கொடுத்து வருகிறேன். எளிதில் வர்த்தகம் செய்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவம் அளித்து எனது அரசு செயற்பட்டுவருகிறது.

இந்தியப் பொருளாதாரத்தில் சீர்திருத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு எனது அரசு தீவிர உறுதிபூண்டுள்ளது.

கடந்த இரண்டரை ஆண்டு காலமாக, இந்திய வளத்தைப் பயன்படுத்துவதிலும், பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்துவதிலும் மத்திய அரசு ஓய்வின்றி தொடர்ந்து பணியாற்றுகிறது.

இதனால் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, பணவீக்கம், நிதிப் பற்றாக்குறை, நடப்புக் கணக்கு பற்றாக் குறை, வெளிநாட்டு முதலீடுகள் போன்ற முக்கிய பேரியல் பொருளாதார அம்சங்களில் கிடைக்கும் நல்ல பயன்கள் ஊக்கமளிப்பவையாக உள்ளன.



உலகிலேயே இந்தியா மிகவும் வளர்ச்சியடைந்து வரும் முக்கியப் பொருளாதார சக்தியாக திகழ்கிறது.

உலக அளவில் பொருளாதார நிலை மந்தமாக இருந்தபோதிலும், இந்தியா சிறப்பான வளர்ச்சியைப் பதிவு செய்தது.

மேலும், உலகச் சந்தையில் ஒளிவீசும் பகுதியாக இந்தியா தற்போது உள்ளது. அதே போல், உலக வளர்ச்சியை இயக்கும் கருவியாகவும் இந்தியா பார்க்கப்படுகிறது.

உலகில் தற்போது உள்ள மிகவும் வெளிப்படையான பொருளாதாரங்களில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவில் கடந்த 2014 ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து இது வரையிலும் 13 ஆயிரம் கோடி டொலர்கள் அந்நிய நேரடி முதலீடு மூலம் கிடைத்துள்ளது.

இது முந்தைய 2 நிதியாண்டு காலங்களில் செய்யப்பட்ட முதலீடுகளுடன் ஒப்பிடுகையில், 66 சதவீதம் அதிகமாகும். இந்தியப் பொருளாதாரத்தின் மீது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையே இது வெளிப்படுத்துகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

# ஜல்லிக்கட்டு விவகாரம் விஸ்வரூபம் எடுத்தது: மதுரையில் 2 ஆவது நாளாக மாணவர் போராட்டம்!

மதுரை, ஜன.12

ஜல்லிக்கட்டு நடத்தக் கோரி மதுரையில் கல்லூரி மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்து நேற்று முன்தினம் 2 ஆவது நாளாகப் பேரணி நடத்தியுள்ளனர்.

தமிழகத்தில் பொங்கல் பண்டிகைக்கு ஜல்லிக் கட்டு நடத்த அனுமதிகோரி பல்வேறு அமைப்பினர், அரசியல் கட்சியினர் தொடர்போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த செவ்வாயன்று மதுரை கோரிப்பாளையத்தில் ஏராளமானோர் திரண்டு, பேரணி நடத்தி, ஆட்சியரிடம் மனு அளித்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று, முன்தினம் மதுரை கல்லூரி மாணவர்கள் ஏராளமானோர் வகுப்புகளைப் புறக்கணித்து விட்டுத் திருப்பரங்குன்றம் பிரதான வீதியில் மறியலில் ஈடுபட்டுள்ளனர். பின்னர் ஜெய்ஹிந்த்புரம், ஜீவா நகர் உள்ளிட்ட பல்வேறு வீதிகள் வழியாகப் பேரணியாகச்



சென்ற மாணவர்கள், மீண்டும் பிரதான வீதிக்குச் சென்று மத்திய அரசு, பீட்டா அமைப்பை கண்டித்து கோஷங்களை எழுப்பியுள்ளனர்.

சட்டக் கல்லூரி மாணவர்களும் கல்லூரியைப் புறக்கணித்து மாவட்ட நீதிமன்றம் வரை பேரணியாக சென்றுள்ளனர். மேலும், அங்கு ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகக் கோஷங்களை எழுப்பியுள்ளனர்.

இதேவேளை, நேற்றும் அனைத்துக் கல்லூரி மாணவர்களும்தொடர்ந்தும் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட அழைப்பு விடுத்துள்ளனர்.

மதுரை புதூர், காளவாசல் ஆகிய பகுதியில் இருந்து ஊர்வலமாகச் செல்லவும் திட்டமிட்டுள்ளனர்.

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான போராட்டங்கள் விஸ்வரூபம் எடுத்துள்ளமையால் தமிழகத்தின் முக்கிய வீதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதுடன், கூடுதல் பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.


# ஜல்லிக்கட்டு நடந்தே தீரும்; எள்ளளவும் பின்வாங்கோம்!

## முதல்வர் பன்னீர்செல்வம் கூறுகிறார்

சென்னை,ஜன.12

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு உறுதியாக நடக்கும் என்று தமிழக முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு:-



தமிழகத்தில் ஜல்லிக்கட்டு உறுதியாக நடக்கும். அதனைத் தமிழக அரசு உறுதி செய்யும். ஜல்லிக்கட்டு நடத்தும் முடிவிலிருந்து எள்ளளவும் பின்வாங்க மாட்டோம்.

அதேநேரம், பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராகச் சட்டம் இயற்ற இயலாது. அவ்வாறு 2009 இல் தி.மு.க. கொண்டு வந்த சட்டத்தை உச்ச நீதிமன்றம் இரத்து செய்திருந்தது. எனவே,தமிழக அரசால் தனியாகச் சட்டம் இயற்ற முடியாது.

இருந்தாலும் தமிழர்களின் பண்பாடு கலாசாரம் ஆகிய வற்றை நிலைநிறுத்த உறுதியாகச் செயல்படுவோம் என்றும் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் தீபா ஆதரவாளர்கள் ஆலோசனை கூட்டம்!

சென்னை, ஜன.12

தமிழகம் முழுவதும் தீபா ஆதரவாளர்கள் தொடர்ந்து ஆலோசனை கூட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந் நிலையில், சென்னையில் நேற்று முதல் முறையாக தீபா ஆதரவாளர்கள் ஆலோசனைக்கூட்டம் நடத்தியுள்ளனர்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளராகவும், முதல் அமைச்சராகவும் இருந்த ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர், அவரது அண்ணன் ஜெயக்குமாரின் மகள் தீபா அரசியலுக்கு வர வேண்டும் என்று அ.தி.மு.க. தொண்டர்களில் ஒரு பிரிவினர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

சென்னை தி.நகரில் உள்ள தீபாவின் வீட்டில் அவரை



சந்திப்பதற்காக அ.தி.மு.க. தொண்டர்களும், பொது மக்களும் தினமும் கூட்டம் கூட்டமாகத் திரள்கின்றனர். வயது வித்தியாசமின்றி அனைத்துத் தரப்பினருமே தீபாவைச் சந்தித்துப் பேசுவதற்காக ஆர்வத்துடன் காத்திருக்கின்றனர்.

இவ்வாறு வீட்டுக்கு வரும்தொண்டர்களைத் தீபாவின் கணவர் மாதவன் காலையில் சந்தித்துப் பேசி வருகிறார். மாலையில் தீபா தொண்டர்களைச் சந்தித்து சிறிது நேரம் அவர்களிடம் உரையாற்றுகிறார்.

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக இது போன்று தொண்டர்களைச் சந்தித்து வரும் தீபா, கடந்த இரு நாள்களுக்கு முன்னர் தனது அரசியல் பயணம் எப்போது தொடங்கும் என்பதை வெளிப்படையாக அறிவித்திருந்தார்.

எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவையொட்டி அவரது பிறந்த நாளான எதிர்வரும் 17 ஆம் திகதி எனது அரசியல் பயணம் தொடங்கும் என்று தீபா கூறியுள்ளார்.

அன்றைய முக்கிய முடிவுகள் சிலவற்றையும் அதிரடியாக அவர் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது தமிழகம் முழுவதும் தீபா பேரவை தொடங்கப்பட்டுள்ளது. இதற்குப் பொறுப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அ.தி.மு.க.வில் ஒரு பிரிவினரே இதனைத் தொடங்கி கூட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

தீபாவை அரசியலுக்கு அழைக்கும் விதமாகப் பதாகைகளையும் சுவரொட்டிகளையும் வெளியிட்டு வருகின்றனர்.


அதில் இளைய புரட்சித் தலைவியே, வருங்கால முதல்வரே, அம்மா வழியில் வழி நடத்த வாருங்கள் என்பது போன்ற வாசகங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்தப் பேரவையைத் தீபா அங்கீகரித்து அதற்குதலைமை தாங்குவாரா? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இதேவேளை, தமிழகம் முழுவதும் தீபா ஆதரவாளர்கள் தொடர்ந்து ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில்நேற்றுச் சென்னையில் தீபா ஆதரவாளர்கள் முதல் முறையாக கூடி ஆலோசனை நடத்தியுள்ளனர்.

# காபூலில் தொடர் குண்டுத் தாக்குதல்; ராஜதந்திரிகள் ஐவர் உட்பட 30 பேர் பலி!

## நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு அருகில் பயங்கரம்





காபூல், ஜன.12

ஆப்கானிஸ்தான், தலைநகர் காபூலில் நடத்தப்பட்ட இரண்டு தொடர் குண்டுத்தாக்குதல்களில் 5 ஐக்கிய அரபு இராச்சியத்தின் இராஜதந்திரிகள் உட்பட 30 பேர் உயிரிழந்தனர்; 80 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆப்கனிஸ்தான் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு அருகில் நேற்று முன்தினம் இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அந்த நாட்டு உள்துறை அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கன்டஹாரிலுள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ் தலத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 11 பேர் உயிரிழந்தனர். மேலும் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதல்களுக்குத் தலிபான் ஆயுததாரிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கான தூதுவரும் அடங்குவார் என்று அந்தநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னர் ஹெல்மண்ட் மாகாணத்திலுள்ள உளவுத்துறை அதிகாரி ஒருவரின் வீட்டின் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 7 பேர் வரை கொல்லப்பட்டனர். நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலிருந்து உத்தியோகத்தர்கள் வெளியேறும் சந்தர்ப்பத்தில் காபூல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

## பழமையான கல்லறை ஈராக்கில் கண்டுபிடிப்பு



பக்தாத், ஜன.12

ஈராக்கில், 2 ஆயிரத்து 400 ஆண்டுகள் பழைமையான கல்லறை ஒன்று எலும்புக் கூட்டுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அந்த நாட்டின் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.


இந்தக் கல்லறை அசயி மெனித் பேரரசு (கி.மு.550- 330) காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர் அலெக்ஸாண்டரால் தோற்கடிக்கப்பட்ட மத்திய கிழக்கு மன்னன்.

இந்த எலும்புக்கூடு பார்ப்பதற்கு மிகவும் கலைஅம்சமாக உள்ளது. கல்லறையில் 5 முழுமையான நாளங்கள் இருந்தன.

அமெரிக்காவில் உள்ள பாஸ்டான் தலைமையில் ஆய்வாளர்கள் குழு இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளது. (எ)

## அமெரிக்க மக்களை நெகிழச் செய்தது ஒபாமாவின் கண்ணீருடனான உரை

### நேற்றுமுன்தினம் சிக்காகோவில் பிரியாவிடை



Getty

அமெரிக்காவின் சிக்காகோவில் நடைபெற்ற பிரியாவிடை உரையில் அமெரிக்கர்களுக்குக் கண்ணீருடன் ஒபாமா நன்றி தெரிவித்தார்.

தற்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக உள்ள பராக் ஒபாமாவின் பதவிக்காலம் எதிர்வரும் 20 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இதனிடையே, நேற்று முன்தினம் சிக்காக் கோவில் நடைபெற்ற பிரியாவிடை உரையில் ஒபாமா பேசினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரத்தில் எனக்கும், மிச்செலுக்கும் அதிகளவில்வாழ்த்துக்கள் வந்தன. அதற்காக மக்களுக்கும், என்னுடைய நலம் விரும்பிகளுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றிகூறவிரும்புகிறேன்.

ஒவ்வொரு நாளும் நான் மக்களிடமிருந்து ஏதேனும் ஒன்றைக் கற்றுக்கொண்டு இருக்கிறேன். அதுவே என்னை அமெரிக்காவின் சிறந்த ஜனாதிபதியாக மாற்றியது என்று கூறிய ஒபாமாவின் கண்களில் வந்த கண்ணீர் அமெரிக்க மக்களை நெகிழச் செய்தது.

எமது பொருளாதார வளர்ச்சியும் சிறப்பான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. எனினும் நாம் வளர இன்னும் அதிகம் இருக்கின்றன.

8 ஆண்டுகளாக அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்துள்ளேன். ஒன்றாகவே வீழ்வோம் அல்லது ஒன்றாகவே எழுவோம்.

பயங்கரவாதம் ஜனநாயகத்துக்கு மிகப்பெரிய சவாலாக உள்ளது. இதனை எமது குழந்தைகளுக்கு எடுத்துரைத்து அவர்களை சிறந்தபண்புள்ளவர்களாக வளர்க்க வேண்டும்.

மேலும் அமெரிக்காவில் குடியேறியவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் ஒபாமா கூறினார். (எ)

## ஜேர்மன் முன்னாள் ஜனாதிபதி காலமானார்

பெர்லின், ஜன.12

ஜேர்மனிய முன்னாள் ஜனாதிபதி ரோமன் ஹேர்ஸொக் தனது 82 ஆவது வயதில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை காலமானார்.

அந்தநாட்டில் அரசியல் மற்றும் சமூக சீர்திருத்தம் ஒன்றை வலியுறுத்தியதன் மூலம் அவர் அங்குள்ள மக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் 1994 ஆம் ஆண்டிலிருந்து 1999 ஆம் ஆண்டு வரை அந்த நாட்டின் வைபவ ரீதியான, அதேசமயம் செல்வாக்குமிக்க ஜனாதிபதிப் பதவியை வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)



## ஒபாமாவுக்கு வேலை கொடுக்கத் தயார்

### அமெரிக்க இசை நிறுவனம் அறிவிப்பு

வொஷிங்டன், ஜன.12

'ஒபாமாவுக்கு வேலை கொடுக்கத் தயார்' என்று அமெரிக்க இசை நிறுவனமான 'ஸ்பாடிபை' அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் ஒபாமா எதிர்வரும் 20 ஆம் திகதி ஓய்வு பெறுகிறார். அவருக்குப் பின்னர் ரொனால்ட் ட்ரம்ப் புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்கிறார்.

இந்தநிலையில் பதவி விலகும் அதிபர் ஒபாமாவுக்கு வேலை கொடுக்க அமெரிக்காவின் 'ஸ்பாடிபை' என்ற இசை நிறுவனம் தயாராக உள்ளது.

'ஜனாதிபதிக்கு வேலை வாய்ப்பு' என்ற தலைப்பில் ஒரு விளம்பரம் வெளியிட்டுள்ளது. அதில், இந்த வேலைக்கு 'நாட்டின் மிக உயரிய பணியில் இருந்த 8 ஆண்டுகள் அனுபவம் தேவை' என்று குறிப்பிடப்பட் டுள்ளது.

மேலும் அதில், அவர் உலக அமைதிக்கான நோபல் பரிசு பெற்று இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சமீபத் தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ஒபாமா, தான் வெள்ளை மாளிகையின் ஜனாதிபதிப் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு 'ஸ்பாடிபை' நிறுவனம் தனக்கு வேலை வாய்ப்பு வழங்கும் என்று எதிர்பார்ப்பதாக நகைச்சுவையுடன் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# கூட்டு எதிர்க்கட்சிகளின் கூட்டம் நுகேகொடையில்!

## ஜனவரி 27 இல் நடத்த ஏற்பாடு

கொழும்பு, ஜன.12

அரசுக்கு எதிராக மக்களைத் திரட்டும் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று எதிர்வரும் 27ஆம் திகதி ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் ஏற்பாட்டில் நுகேகொடையில் நடைபெறவுள்ளது.

நேற்றுமுன்னதினம் மாலை கொழும்பிலுள்ள மஹிந்த ராஜபக்ஷவின் அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரால் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழுபேரைக் கைது செய்து சிறையில் அடைத்த பின்னர் தேர்தலை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது எனவும் நாடு முழுவதும் இருந்து ஆதரவாளர்களை ஒன்று திரட்டி இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் கூட்டு எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன.

# சீனா புத்தகக் கண்காட்சி நிகழ்வில் இலங்கை வெளியீட்டாளர் குழுவும்!

கொழும்பு, ஜன.12

சீனத் தலைநகர் பீஜிங்கில் இன்று ஆரம்பமாகவுள்ள புத்தகக் கண்காட்சி நிகழ்வு ஒன்றுக்கு இலங்கை வெளியீட்டாளர்கள் 16 பேர் அடங்கிய பிரதிநிதிகள் குழு ஒன்று சீனா செல்லவுள்ளது.

இதற்கமைய இலங்கை வெளியீட்டாளர் பிரதிநிதிகள் குழு இன்று சீனா செல்லவுள்ளது என்று சீனச் சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள் ளது.

30 வருட வரலாற்றில் இடம்பெறாத புத்தகக் கண்காட்சியாக இந்த நிகழ்வு அமையவுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சீன அரசின் உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் புத்தகக் கண்காட்சியின் ஊடாக இரு நாடுகளிலும் உள்ள வெளியீட்டாளர்களுக்கு இடையில் நெருக்கமான பதிப்புரிமை உறவுகளுக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்று கண்காட்சி அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இதன்மூலம் சீனாவின் வெளியீட்டுத் துறையில் முன்னேற்றம் செலுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புத்தகக் கண்காட்சியின் போது 2016ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 5 இலட்சத்துக்கும் அதிகமான புதிய புத்தகங்கள் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப் படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தப் புத்தகக் கண்காட்சி இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 14 ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# நாட்டில் நல்லாட்சி அரசு தற்போது வெள்ளத்தில்!

## ரோஹித அபேகுணவர்தன எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.12

நாட்டில் நல்லாட்சி அரசு தற்போது வெள்ளத்தில் போயுள்ளது என மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபே குணவர்தன தெரிவித்துள்ளார்.

பொலிஸ் நிதி மோசடி விசாணைப் பிரிவினரால் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ கைது செய்யப்பட்டமையை அடுத்து, ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

''ஜனநாயகமும், நல்லாட்சியும் நாட்டு மக்களின் வயிற்றிலும், வாயிலும் அடிப்பதாகவே அமைந்துள்ளது.

''நாட்டில் இடம்பெறும் அநீதிகள் தொடர்பில் கருத்து வெளியிடுபவர்களைப் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு, குற்ற விசாரணைப் பிரிவு ஆகியவற்றுக்கு அழைத்துச் செல்கின்றனர்.

''இவ்வாறுதான் தற்போது நாட்டில் ஜனநாயகம் நிலவுகின்றது.''- என்றார். (எ)

### கற்கோவளம் சாயி நிலையத்தில் பொங்கல் நிகழ்வு

வடமராட்சி, ஜன.12

பருத்தித்துறை கற்கோவளம் வல்லை வீதியில் அமைந்தள்ள ஸ்ரீ சத்திய சாயிசேவா நிலைய சாயிசூரபியில் பொங்கல் நிகழ்வு நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. பிரசாந்தி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் பொங்கல் விழா சூரியதேவர் வழிபாடு, தேவபாராயணம், பஜனை, புதிய ஆண்டுக்கான நிர்வாகசபை உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்தல் மகா மங்கள ஆரத்தியுடன் நிறைவு பெறும். (இ-30)

# 50 அடி உயரத்திலிருந்து வீழ்ந்த பெண் பலியானார்!

கொத்மலை, ஜன.12

கொத்மலை பிரதேசத்தில் உள்ள தேயிலைத் தோட்டம் ஒன்றில் பெண்கள் தேயிலைக் கொழுந்து பறிப்பதைக் கண்காணித்துக் கொண்டிருந்த பெண்ணொருவர் 50 அடி உயரத்தில் இருந்து விழுந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கட்டுகிதுல ஹெல்பொட தோட்டம் கீழ் பிரிவில் இடம்பெற்றுள்ளதுஎன்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த விஸ்வநாதன் விமலா வதி (வயது47) என்ற இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரே உயிரிழந்தவராவார்.

அவரது சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக புஸல்லாவ வகுகவ்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.


சம்பவம் தொடர்பாக புஸல்லாவப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

### திருப்பாவை நோன்பு நிறைவு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலில் கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று வரும் மார்கழி மாத திருப்பாவை உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலையுடன் நிறைவு பெறுகின்றது.

அன்றைய தினம் 5 மணிக்கு உதயகாலப்பூஜை இடம்பெறும். 5.05 மணிக்கு மகா குளிர்த்தி அபிஷேகமும், 5.30 மணிக்கு திருவனந்தல் பூஜையும் நடைபெற்று ஆண்டாள் திருப்பாவைப் பாடல்கள் பாடப் பெற்று அரங்கல் நாயகண்டம் சேர்ப்பிக்கும் நிகழ்வுடன் மார்கழிதிருப்பாவை நோன்பு நிறைவு பெறும்.(இ-30)

கோண்டாவில் மக்கள் நலன் பேணும் அமைப்பின் நான்காம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் இடம் பெற்றது. நிகழ்வில் 40 மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவும் 60 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.



மக்கள் நலன் பேணும் அமைப்பின் உதவியுடன் க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தியடைந்த மாணவரை சிறிதரன் எம்.பி.கௌரவிக்கிறார்.


அமைப்பின் தலைவர் செ.ஜெயபாலன் உரையாற்றுகின்றார்.



சேவையாளர் கௌரவிப்பில் கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை அதிபர் திருமதி.ந.சிவராணியை தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் கௌரவிப்பு.


கௌரவிப்பு நிகழ்வுக்கு வருகை தந்தவர்கள்.

# மலிங்கவின் மீள்வருகை டெங்கு காய்ச்சலால் தடை!

கொழும்பு, ஜன.12

இலங்கையின் வேகப் பந்துவீச்சாளரும் உலக இருபதுக்கு 20 சம்பியன் அணியின் தலைவருமான லசித் மலிங்கவின் மீள் வருகை டெங்குக் காய்ச்சல் காரணமாக தடைப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருவகை மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் தொடர்களுக்கான இலங்கைக் குழாம்களில் அவர் இடம்பெறமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

டெங்கு காய்ச்சலினால் மலிங்க பீடிக்கப்பட்டதாலும் அவரால் முறையான பயிற்சிகளில் ஈடுபட முடியாமல் போனதாலும் அவரது மீள் வருகை பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இடது முழங்காலில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக கடந்த வருடம் நடைபெற்ற உலக இருபதுக்கு 20 கிரிக்கெட் மற்றும் ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடுவதை அவர் தவிர்த்திருந்தார்.

தனது முழங்காலில் ஏற்பட்ட எலும்புமுறிவு பூரண குணமடைந்ததைத் தொடர்ந்து கடந்த செப் டெம்பர் மாதத்திலிருந்து மிகவும் அவதானத்துடன் பயிற்சிகளில் ஈடுபட ஆரம்பித்தார். எவ்வாறாயினும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் வீரர்களுக்கான ஒப்பந்தத்தில் இணைய அவர் விரும்பவில்லை.



கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்னர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டதை அடுத்து அவரால் பயிற்சிகளில் ஈடுபடமுடியாமல் போனது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள 3 போட்டிகள் கொண்ட சர்வதேச இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடருக்கு மலிங்க தயாராகிவிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.


2014 இலிருந்து பல தடவைகள், உபாதைக்குள்ளான மலிங்க 2015 நவம்பர் மாதத்திற்குப் பின்னர் ஒரே ஒரு சர்வதேச கிரிக்கெட் போட்டியிலேயே விளையாடியுள்ளார்.

மலிங்கவுக்குப் பதிலாக பெரும்பாலும் லஹிரு குமார இலங்கை குழாமில் இணைத்துக் கொள்ளப்படுவார் என நம்பப்படுகின்றது.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக இன்று ஆரம்பமாகவுள்ள மூன்றாவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ள இலங்கை, எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 3 போட்டிகள் கொண்ட சர்வதேச இருபது 20 கிரிக்கெட் தொடரிலும் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 3 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரிலும் விளையாடவுள்ளது.

இந்நிலையில், இருபதுக்கு 20 தொடருக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆற்றல் நாயகன் லஹிரு குமார!




கொழும்பு, ஜன.12

இலங்கையில் அண்மையில் உருவான வேகப்பந்து வீச்சாளர்களில் லஹிரு குமார தனது ஆற்றல்களால் பலரையும் வியக்கவைத்துள்ளார்.

19 வயதுக்குட்பட்ட இலங்கை அணியில் வெகுவாகப் பிரகாசித்த லஹிரு குமார, ஸிம்பாப்வேக்கான டெஸ்ட் தொடருக்கு அழைக்கப்பட்டபோது அவரால் சாதிக்க முடியாமல் போனது.

ஆனால், தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது முயற்சியிலேயே 6 விக்கெட்டுக்களை வீழ்த்தி தனது பெயரை இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் பதித்துக்கொண்டார்.

தென்னாபிரிக்காவில் டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய முதலாவது இலங்கையர் என்ற பெருமையையும் ஐந்து விக்கட் குவியலை மிக இளவயதில் பதிவு செய்த இரண்டாவது இலங்கையர் என்ற பெருமையையும் லஹிரு குமார பெற்றுக் கொண்டார்.

மிகக் குறுகிய காலத்தில் தனது பெரு முன்னேற்றத்தின் மூலம் பயிற்றுநர்களையும் தெரிவாளர்களையும் பெரிதும் கவர்ந்துள்ளார்.

எனினும் அவர் இன்னும் முன்னேறவேண்டும் எனவும் அவரால் முன்னேற முடியும் எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

எவ்வாறு கட்டுப்பாட்டுடன் பந்துவீச வேண்டும் என்பது குறித்து லஹிரு குமார கவனஞ் செலுத்த வேண்டும் என பந்துவீச்சு பயிற்றுநர் சம்பிக்க ராமநாயக்க கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'அவர் தற்போது மணிக்கு 140 கிலோ மீற்றர் வேகத்தை விட சற்று அதிகமாக பந்து வீசுகின்றார். காலப் போக்கில் அவரால் மணிக்கு 150 கிலோ மீற்றர் வேகத்தில் பந்துவீசக் கூடியதாக இருக்கும்.

லஹிருவுக்கு இப்போது 19 வயது. அத்துடன் அவர் பந்துவீச்சு குறித்து இன்னும் கற்று வருகின்றார். மிகச் சிறந்த அணிக்கு எதிராக அதுவும் அதன் சொந்த மண்ணில் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றுவது என்பது பிரமாதம்.

அது பாராட்டத்தக்கது. அவர் சில பந்துகளை மிகத் துல்லியமாக வீசினார். உரிய இலக்கை நோக்கி சிறப்பாக பந்துவீசுவாரேயானால் அவர் ஒரு திறமைவாய்ந்த பந்து வீச்சாளராவார்.

லஹிரு குமார ஹொக்கி விளையாட்டு வீரராகப் பிரகாசித்து விபத்து காரணமாக 15 ஆவது வயதில் கிரிக்கெட் வீரராக தன்னை மாற்றிக் கொண்டுள்ளார். நான்கு வருடங்களுக்கு முன்னர் மலேசியா சென்ற 15 வயதுக்குட்பட்ட இலங்கை அணியில் இடம் பிடித்தார்.

எனினும் 19 வயதுக்குட்பட்ட அணியில் இடம் பிடித்த பின்னரே சற்று பிரபல்யம் அடையத் தொடங்கினார்.

இங்கிலாந்துக்கு எதிராக நொதம்டனில் கடந்த வருடம் நடைபெற்ற இளையோர் டெஸ்ட் போட்டி ஒன்றில் 134 ஓட்டங்களுக்கு 11' விக்கெட்டுக்களை வீழ்த்தியதன் மூலம் ஒரு சிறந்த பந்துவீச்சாளராகத் தெரிவாளர்கள் முன்னிலையில் தோன்றினார்.

இலங்கையில் வேகப் பந்துவீச்சாளர்கள் பலர் உபாதைக்குள்ளாகி வரும் நிலையில் லஹிரு குமார கட்டுப்பாட்டுடன் பந்து வீச்சில் ஈடுபடுவது உகந்தது. அதற்கான சீரிய பயிற்சிகளில் அவர் ஈடுபடுவது வரவேற்கத்தக்கது என்றும் கூறியுள்ளார்.

## பாகிஸ்தான் வீரர் சர்வ்ராஸ் நாடு திரும்புகின்றார்!

மெல்போர்ன், ஜன.12


ஆஸ்திரேலியாவுக்கு எதிரான சர்வதேச ஒருநாள் தொடர் நெருங்கிவரும் நிலையில் பாகிஸ்தான் வீரர் சர்வ்ராஸ் அஹ்மது நாடு திரும்பவுள்ளார்.

அவரது தாயார் அவசர கண்காணிப்புப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் அவர் நாடு திரும்புகிறார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.


இந்நிலையில், இவர் இன்று ஆஸ்திரேலியாவிலிருந்து பாகிஸ்தானுக்குப் புறப்படவுள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான பாகிஸ்தான் கிரிக்கெட் குழாமில் மற்றொரு விக்கட் காப்பாளராக மொஹமத் ரிஸ்வான் இடம்பெறுகின்றார்.

இதேவேளை, உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் 79.61 என்ற சராசரியுடன் ஆயிரத்து 35 ஓட்டங்களைக் குவித்த கம்ரன் அக்மால் அணிக்கு மீள அழைக்கப் படலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது.



# டோனியின் நெகிழ்ச்சியான தருணம்!



மும்பை, ஜன.12

இங்கிலாந்து அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் ரசிகர்களின் கூட்டத்தைக் கண்டு டோனி உணர்ச்சிவசப்பட்டுள்ளார்.

மேலும், 'உங்களின் வருகையை பார்க்கும் போது, என் மீது எந்த அளவுக்கு அன்பு வைத்து உள்ளர்கள் என்பதை உணர முடிகிறது' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றிகரமான தலைவராக டோனி வலம் வந்தவர். கடந்த வாரம் திடீரென ஒரு நாள் போட்டி மற்றும் இருபதுக்கு 20 அணியின் தலைவர் பதவிகளில் இருந்து விலகினார்.

மூன்று வகையிலான அணிகளுக்கும் விராட் கோஹ்லி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். டோனி இனி ஒரு விக்கெட் காப்பாளராக மட்டும் அணியில் தொடருவார்.

இந்நிலையில், மும்பை பிராபோர்ன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த இங்கிலாந்து அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் இந்திய 'ஏ' அணியின் தலைவராக டோனி செயற்பட்டார்.

இந்திய அணிக்குரிய சீருடையில் டோனி தலைவராக அடியெடுத்து வைத்த கடைசிப் போட்டி இது என்பதால் அவரை உற்சாகப்படுத்த ஏராளமான ரசிகர்கள் அங்கு திரண்டு இருந்தனர்.

அதற்கு ஏற்ப கிரிக்கெட் சபையும் ரசிகர்களுக்கு இலவச அனுமதி வழங்கி இருந்தது.

ரசிகர்களின் கூட்டத்தைக் கண்டு உணர்ச்சி வசப்பட்ட டோனி நாணயச் சுழற்சியின்போது பேசுகையில், 'உங்கள் எல்லோருக்கும் எனது நன்றி. 2007 ஆம் ஆண்டில் இருந்து நீங்கள் (ரசிகர்கள்) எனக்குப் பக்கபலமாக இருக்கிறீர்கள்.

இவ்வளவு ரசிகர்கள் வந்திருப்பதைப் பார்க்க மகிழ்ச்சியாக உள்ளது.


இது பயிற்சி ஆட்டம் என்றாலும் கூட உங்களின் வருகையைப் பார்க்கும் போது, என் மீது எந்த அளவுக்கு அன்பு வைத்து உள்ளீர்கள் என்பதை உணர முடிகிறது' என்று தெரிவித்துள்ளார்.

பயிற்சி ஆட்டத்தில் டோனியும் ரசிகர்களை ஏமாற்றவில்லை. 8 பவுண்டரி, 2 சிக்சர் உட்பட 68 ஓட்டங்களை விளாசி ரசிகர்களுக்கு விருந்து படைத்தார்.

டோனி துடுப்பெடுத்து ஆடிக் கொண்டிருந்த போது, ஆர்வமிகுதியில் ஒரு ரசிகர் திடீரென மைதானத்திற்குள் நுழைந்துள்ளார். அவர் டோனியை நோக்கி வேகமாக ஓடி வந்துள்ளார். உடனே டோனி, பிட்ச்சில் மிதித்து விடாதீர்கள் என்று அவரைப் பார்த்துக் கூறியுள்ளார்.

அந்த ரசிகர் டோனியின் பக்கம் பாய்ந்து சென்று அவரிடம் ஆசி பெறுவதற்காக குனிந்து டோனியின் கால்களைப் பிடித்துள்ளார். பின்னர் பொலிஸார் அந்த ரசிகரை வெளியேற்றியுள்ளனர்.

# வசிம் அக்ரமுக்கு எதிராக பிடி ஆணை!



கராச்சி, ஜன.12

வீதி விபத்து வழக்கில் நீதிமன்றில் ஆஜராகாத காரணத்தால் வசிம் அக்ரமுக்கு பிணையில் வெளியே வரக்கூடிய பிடி ஆணையைப் பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் வசிம் அக்ரம் சென்ற கார் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி மீது மோதியது.

இதனால், ஆத்திரம் அடைந்த அவர் வசிம் அக்ரம் மீது துப்பாக்கியால் சுட்டார். ஆனால், துப்பாக்கி ரவைகள் அவர் மீது படவில்லை. காரில் தான் குண்டு பாய்ந்தன.

சில நாட்கள் கழித்து இரு தரப்பினரும் சமரசம் செய்து கொண்டனர்.

ஆனால், பகதூர்பாத் பொலிஸ் நிலையம் இது குறித்து தானாக முன்வந்து வழக்குபதிவு செய்தது.

இந்த வழக்கு விசாரணை கராச்சி நீதிமன்றத்தில் நடந்த போது வசிம் அக்ரம் 31 தடவைகள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

இதைத் தொடர்ந்தே வசிம் அக்ரமுக்குப் பிணையில் வெளியே வரக்கூடிய பிடி ஆணையைப் பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான இருபதுக்கு 20 இலங்கை அணி!




கொழும்பு, ஜன.12

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இருபதுக்கு 20 தொடரில் விளையாடவுள்ள இலங்கை அணி வீரர்களின் பெயர் விபரங்கள் இலங்கை கிரிக்கெட் சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக 3 இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடவுள்ள 15 பேர் கொண்ட இலங்கை அணி வீரர்களின் பெயர்விவரங்களைஇலங்கை கிரிக்கெட் சபை நேற்று வெளியிட்டுள்ளது.


இதன்படி துடுப்பாட்ட வீரரும் வேகப் பந்துவீச்சாளருமான புதுமுக வீரர் திக்ஷில டி சில்வா அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் குசல் ஜனித் பெரேரா இருபதுக்கு 20 அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இருபதுக்கு 20 இலங்கை அணியின் விபரம் வருமாறு:-

1. அஞ்சலோ மத்தியூஸ் (தலைவர்)
2. தினேஸ் சந்திமால் (உபதலைவர்)
3. குசேல் மெண்டிஸ்
4. தனஞ்சய டி சில்வா
5. தனுஷ்க குணதிலக
6. நிரோஷன் டிக்வெல்ல
7. சீகுகே பிரசன்ன
8. சுரங்க லக்மால்
9. நுவான் பிரதீப்
10. இசுறு உதான
11. அசேல குணரத்ன
12. சச்சித்ர பத்திரண
13. லக்ஷான் சந்தகன்
14. திக்ஷில டி சில்வா
15. நுவான் குலசேகர

# ஏப்ரலில் களம் இறங்குகிறார் ஷரபோவா!



பாரிஸ், ஜன.12

15 மாத தடை காலத்துக்குப் பின்னர் ஏப்ரல் மாதம் ஜெர்மனியில் இடம்பெறும் ஸ்டட்கார்ட் கிராண்ட்பிரி டென்னிஸ் போட்டியின் மூலம் ஷரபோவா மறுபிரவேசம் செய்ய முடிவு செய்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய ரஷ்ய டென்னிஸ் வீராங்கனை மரிய ஷரபோவாவுக்கு 15 மாதங்கள் தடை விதிக்கப்பட்டது.

தடை காலம் ஏப்ரல் மாதம் முடிவுக்கு வருகிறது.

எனவே, மீண்டும் டென்னிஸ் போட்டிகளுக்குத் திரும்புவதற்காக ஷரபோவா தன்னை ஆயத்தப்படுத்தி வருகிறார்.

தடை காலத்திற்கு பின்னர் ஏப்ரல் மாதம் ஜெர்மனியில் நடக்கும் ஸ்டட்கார்ட் கிராண்ட்பிரி டென்னிஸ் போட்டியின் மூலம் மறுபிரவேசம் செய்ய முடிவு செய்திருக்கிறார்.

இந்தப் போட்டியில் அவர் மூன்று முறை பட்டம் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



தொண்டைமானாறு - துன்னாலை வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட ஒற்றுமை விளையாட்டுக்கழக மைதானத்தை கழகத் தலைவரும் சதுரங்க விளையாட்டுப் பயிற்றுவிப்பாளருமான தி.இராஜசிங்கமும், இ.செந்தில்நாதனும் இணைந்து திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். (30)

## ஒரு சிலருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் மிகவும் பலமாக இருந்த காலத்தில் நான் தனித்து நின்று அவர்களின் சில நடவடிக்கைகளை எதிர்த்துக் குரல் கொடுத்தமை மட்டுமன்றி இப்படித்தான் நடக்கும் என்று இடித்துரைத்துமிருந்தேன். அன்று என்னுடன் இணைந்து தமிழ்த் தலைவர்கள் ஒரு சிலராவது குரல் கொடுத்திருந்தால் தமிழ்மக்கள் முள்ளிவாய்க்கால் அவலத்தை சந்தித்திருக்கமாட்டார்கள். விடுதலைப் புலிகளும் அழிந்திருக்கமாட்டார்கள். ஆனால் அன்று எவரும் அதனை கண்டுகொள்ளவில்லை. பதிலாக எள்ளி நகையாடினார்கள். தமிழ்த் தரப்பு அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், பேராசிரியர்கள் ஆகியோரில் சிலர் மௌனம் சாதிக்க பலர் எனது கருத்தை விமர்சனம் செய்தமையோடு மட்டுமல்லாமல், சில தமிழ் ஊடகங்கள் மூலமாக எனக்குத் துரோகிப் பட்டமும் சூட்டி என்னைக் கொலை செய்வதற்கும் விடுதலைப் புலிகளின் தலைமைக்கு சிபாரிசும் செய்தார்கள். இருந்தும் நான் எனது கருத்தை வலியுறுத்தியே வந்துள்ளேன். காரணம் – தமிழ் மக்களும் விடுதலைப்புலிகளும் அழிந்துவிடக்கூடாது என்பதற்காக. விடுதலைப்புலிகள் அழிந்தமை ஒரு சிலருக்கு வேண்டுமானால் சந்தோசமாக இருக்கலாம். ஆனால் எனக்கு அப்படி அல்ல. நான் நாட்டுமக்கள் அனைவரையும் நேசிப்பவன். எது நடந்துவிடக்கூடாது என்பதற்காக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அடிக்கடி கடிதம் எழுதினேனோ அதுதான் கடைசியில் நடந்தும் முடிந்தது.

அதேபோல்தான் இன்றும் தனித்து நின்று கூறுகின்றேன். தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் தாங்கள்தான் என்று கூறும் ஒரு சிலருடன் மட்டும் நீங்கள் உறவு வைத்துக்கொண்டு, ஏனையவர்களைப் புறம்தள்ளி, தேசிய அரசாங்கம் என்ற போர்வையில் நடத்தும் ஆட்சியில் எமது மக்களுக்கு நிலையான தீர்வு எதுவும் கிட்டப் போவதில்லை. உங்கள் தேசிய அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்களே அரசில் நம்பிக்கை இழந்து பேசுகின்றார்கள். ஓர் அமைச்சர் தேசிய அரசாங்கத்தில் அமைச்சராக இருப்பதற்குத் தாம் வெட்கப்படுகின்றார் என்றும் கூடக் கூறுகின்றார். இன்னும் ஒருவர் நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான், ஆனால் மக்கள் அனைவரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன்தான் என்கிறார். இந்தநிலையில் எமது மக்களுக்கு இந்த அரசு எதனையும் சாதிக்கப் போவதில்லை. காலங்காலமாக குறிப்பிட்ட ஒரு சிலருடன் அவர்களை திருப்திப்படுத்துவதற்காக மட்டுமே நடத்திய பேச்சுகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தன. அதுதான் வரலாறும் ஆகும். அவ்வாறான ஒரு செயலையே மீண்டும் நீங்கள் அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றீர்கள். இது நாட்டுக்கு மீண்டும் ஓர் அழிவையே கொண்டுவரும். சகல தமிழ் அமைப்புகள் மற்றும் சகல முஸ்லிம் தலைவர்கள் ஆகியோரை உள்ளடக்கி ஒரு பேச்சு மூலம் விரைவில் ஒரு தீர்வை முன் வையுங்கள். புதிய அரசமைப்பு என்று கூறி காலத்தை இழுத்தடிப்பதும், மக்கள் மீது வரிச்சுமையை ஏற்றிவிட்டு, என்றுமில்லாதவாறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சலுகைகளை அளிப்பதும், மாற்றத்தை ஏற்படுத்திய சகல இன மக்களையும் ஏமாற்றும் ஒரு செயலாகவே நான் கருதுகின்றேன். மீண்டும் மக்களிடையே இனக்குரோதம் வளரத் தொடங்கியுள்ளது என்பது நாட்டில் அன்றாடம் நடக்கும் நிகழ்வுகளே சான்று கூறுகின்றன.

இவை எல்லாவற்றிற்கும்; நான் ஆரம்பத்தில் இருந்தே அடிக்கடி கூறும் இந்திய முறையிலான ஓர் அரசியல் சாசனத்தை உருவாக்கி தென்னாபிரிக்க அரசியல் சாசனத்தில் உள்ளது போன்ற உரிமைகள் சட்டத்தை (Bill of Rights)உள்ளடக்கி, மீறுவோர் மீது கடுமையான சட்டநடவடிக்கையைமேற்கொள்வதன் மூலம் ஒரு நல்ல தீர்வை வழங்கி நாட்டு மக்கள் அனைவரையும் சுபீட்சமாக வாழவைக்கலாம். – என்று உள்ளது.

## 27 இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்குபற்றுவார் என்றும் சில தீர்க்கமான அரசியல் முடிவுகள் பற்றிய முன்னறிவிப்பை அவர் விடுப்பார் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டைப் பிரிக்கும் புதிய அரசமைப்பு, வாழ்க்கைச் செலவு உயர்வு, உள்ளூராட்சித் தேர்தலைத் தள்ளிப்போடுதல், அரச நிறுவனங்களை விற்றல், திருட்டு மற்றும் ஊழல் ஆகியவற்றுக்கெதிரான போராட்டம் என்ற பெயரில் இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட விருப்பதாகத் தெரிவிக்கின்றது.

பல்லாயிரக்கணக்கானோரைத் திரட்டி அன்று பிற்பகல் 2 மணி முதல் இந்த நடவடிக்கையை முன்னெடுக்க கூட்டு எதிரணி திட்டம் தீட்டிச் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## கைதிகளின் உரிமையைப் பாதுகாக்கச் சட்டம்

சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் புதிய சட்டமூலத்துக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இலங்கைச் சட்டத்தரணிகள்சம்மேளனத்தினதும் சட்டமா அதிபர் திணைக்களத்தினதும் பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட குழுவால் புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னைகளில் இருந்து தப்பி ஓடவே மஹிந்த ராஜபக்ஷ முயன்றார்." – என்ற சாரப்பட பொதுநிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றம் சுமத்தியிருந்தார்.

அது குறித்து டுவிட்டரில் விடுக்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தார் மஹிந்த ராஜபக்ஷ.

ஜனாதிபதித் தேர்தலை நான் முன்கூட்டியே நடத்தியமை நெருக்கடிகளிலிருந்து தப்பிக் கொள்வதற்காக அல்ல.

"தற்போதைய அரசினால் நிறுவப்பட்டுள்ள நிதி மோசடி விசாரணைப் பிரிவு சட்ட விரோதமானது. நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் தவறு செய்யும் நபர்களுக்கு எதிராக இலங்கையில் காணப்படுகின்ற சட்டத்தின்படி எமது ஆட்சிக் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். தற்போதைய நிதி மோசடி விசாரணைப் பிரிவை சட்ட ரீதியானதாகவும், நீதியாகச் செயற்படுகின்றதாகவும் மாற்றுவோம்.

"அரசாங்கம் பெற்றுக் கொள்ளும் கடன் அளவிற்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

"மக்கள் ஆயத்தம் என்றால் அதிகாரத்தை வெகுவிரைவில் பெற்றுக் கொள்ள முடியும்." – என்றார் அவர். (உ)



காலைக்கதிர்
Kalaikkathir

# கிளிநொச்சியில் டெங்கு கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் போர்க்கால அடிப்படையில் முப்படையினரின் உதவியுடன்

## அபாயகரமான இடங்களை தேடி அழிக்கும் நடவடிக்கையும் மும்முரம்







கிளிநொச்சியில் போர்க்கால அடிப்படையில் டெங்குநோய் கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் முப்படையினரின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு நோய் தீவிரமடையும் நிலையில் உள்ளமை அவதானிக்கப்பட்டு அதனை தடுக்கும் வகையில்பல்வேறுநடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. முப்படையினரின்உதவியுடன், சுகாதாரத் துறையினர் இணைந்து இந்தப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இந்த வருடத்தின் முதல் 10 நாள்களில் 23 நோயாளர்கள் டெங்குக் காய்ச்சலுக்கு சிகிச்சைபெற்றுள்ளனர்.

இதனையடுத்து டெங்கு நுளம்புபெருகும் இடங்கள்சுத்திகரிக்கப்படுவதோடு, போர்கால அடிப்படையில் விழிப்புணர்வு மற்றும் சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம்கிளிநொச்சி ஆனந்தபுரம் கிராம அலுவலர் பகுதியில் உள்ள 637 வீடுகளில்,236வீடுகளில்நடத்தப்பட்ட தேடுதலின்போது 93 இடங்களில் அபாயகரமான டெங்கு நுளம்பு வளரும் இடங்கள் கண்டறியப்பட்டு அவற்றில் 83 இடங்கள் உடனடியாக சுத்திகரிக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் இடம்பெற்றபரிசோதனையின்போது 15 அபாயகரமான இடங்கள் அவதானிக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டன.

பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான கிளிநொச்சி பொதுச்சந்தை, கிளிநொச்சி புகையிரத நிலையம் ஆகிய இடங்களில்மேற்கொள்ளப்பட்ட தேடுதலில், 12 அபாயகரமான இடங்கள் கண்டறியப்பட்டு சுத்திகரிக்கப்பட்டன.

பளை, பூநகரி மற்றும் கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும்உள்ள5பாடசாலைகளில் நேற்று முன்தினம் டெங்கு விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள 15 அரச அலுவலகங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பரிசோதனையின்போது 6 அபாயகரமான இடங்கள் அவதானிக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டன.

பூநகரிசுகாதாரவைத்தியஅதிகாரி பிரிவில் உள்ள 4 அரச அலுவலகங்களில் இடம்பெற்ற பரிசோதனையின்போது 2 அபாயகரமான இடங்கள் அவதானிக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டன.

நேற்று கிளிநொச்சி நீதிமன்று, கிளிநொச்சி அரச அதிபர் அலுவலகம், கரைச்சி பிரதேசசெயலகம், கிளிநொச்சிபிரதம தபாலகம், கிளிநொச்சி பொது நூலகம், கிளிநொச்சி பழைய கச்சேரி, கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய இடங்களில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களைத் தேடி அழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதேவேளை கிராமங்களில் வீடுவீடாகச்சென்று விழிப்புணர்வுப் பரப்புரை மற்றும் தேடியழிக்கும் நடவடிக்கைகள் மாவட்டம் முழுவதும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டவுள்ளன என சுகாதாரத்துறையினர்தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புகள் இந்த முயற்சியில் தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்கி உதவுமாறும் சுகாதாரப் பிரிவினர்கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தமுயற்சியில்கிளிநொச்சி மாவட்ட சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினர், பாதுகாப்புப் படையினர் மற்றும் காவல் துறையினரும் சுகாதாரப் பிரிவினரும் பிரதானமான பங்களிப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-70)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் தொடர்பில் அடையாளம் காட்டப்படவில்லை. இதே வேளை அவர்கள் சம்பந்தமான தகவல்களை 30 வருடங்களுக்கு வெளியிடவும் முடியாது.

எனவே இவ்வாறான சாட்சிகள் மூலம்நடத்தப்பட்டவிசாரணைக் கமைய இலங்கைப் படையினர் பெருமளவு சிவில் தரப்பினரை கொலை செய்தனர், காணாமற் போகச் செய்தனர், துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தினர், வடக்கு மாகாண மக்களைக் கொலை செய்வதற்கான திட்டமிட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்தனர் போன்ற குற்றச்சாட்டுக்கள் மனித உரிமைகள்ஆணையாளரின்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்கா இலங்கைக்கு எதிராக பிரேரணை ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைத்தது. அந்தப் பிரேரணையை இலங்கை அரசு அங்கீகரித்து தமதுயோசனையாகமுன்வைத்ததுடன் அதற்கு ஆதரவுவழங்குமாறு ஏனைய நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்தது. இதையடுத்து அந்தப் பிரேரணை மனிதஉரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பிரேரணையின் ஆறாம் உறுப்புரையில் இலங்கைப் படையினருக்கு எதிராக உள்ளயுத்தக்குற்றவிசாரணைகளைச் செய்வதற்காக பொது நலவாய அமைப்புகளின் நீதிபதிகள் உள்ளடங்கலாக சர்வதேச நீதிபதிகளைக் கட்டாயமாக நியமிக்கவேண்டும்என்றுதெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் சர்வதேச நீதிபதிகளின் பிரசன்னத்துக்கு ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இப்போது கூறிவருகின்றார். அவர் தற்போது அதனை நிராகரித்தாலும் அவருடைய அரசுதான் சர்வதேச நீதிபதிகளின் பிரசன்னத்தை சர்வதேசத்துக்கு எழுத்து மூலம் தெரிவித்துள்ளது. எனவே ஜனாதிபதியோ அல்லது அவருடைய அரசோ சர்வதேசத்துக்கு வழங்கியுள்ளவாக்குறுதியைமீறமுடியாது.

தற்போது மற்றுமொரு பயங்கரமான விடயம் நடந்தேறியுள்ளது. இலங்கை அரசு நியமித்த நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பானமக்கள்கருத்தறியும் செயலணிதயாரித்துள்ள அறிக்கையில் சர்வதேச நீதிபதிகளின் பிரசன்னம் தேவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ அதனை நிராகரித்துள்ளபோதிலும் அரசு நியமித்த செயலணி தனது அறிக்கையைஉத்தியோகபூர்வமாக அரசிடம் கையளித்துள்ளது. – என்றார்.

## கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர் சமன் ரத்னாயக்காவை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

"பரவும் வைரஸ்' 'எச்.வன். என்.வன்.' என்றால் நிலைமை விபரீதம் என்று தான் அர்த்தம். விரைந்து பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசரமும், அவசியமும் ஏற்பட்டுள்ளது. போர்க்கால அடிப்படையில் மருத்துவத்துறை செயற்பட வேண்டியது தவிர்க்க முடியாதது" – என்று இவ்விடயம் குறித்துக்கருத்துக்கேட்டபோதுயாழ்ப்பாணத்தின் மூத்த வைத்தியர் ஒருவர் தெரிவித்தார். (உ)

## ஜி.எஸ்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை செயற்படுத்தவும் அமுல்படுத்தவும் இலங்கை அரசு இணக்கம் தெரிவித்தமையைக் கவனத்தில்கொண்டுஇந்தவரிச்சலுகையை மீண்டும் வழங்குவதற்கு ஐரோப்பிய ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிடைக்க வேண்டுமாயின் ஐரோப்பிய ஆணைக்குழுவின் யோசனைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகள் மற்றும் ஐரோப்பியநாடாளுமன்றம்என்பன அனுமதி வழங்க வேண்டும். இவற்றை மேற்கொள்வதற்கு சுமார் நான்கு மாத காலம் செல்லும் என ஐரோப்பிய ஆணைக் குழுவின் பேச்சாளர் தெரிவித் துள்ளார்.

ஜி.எஸ்.பி. பிளஸ்வரிச்சலுகை மூலம் இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் தைத்த ஆடைகள்மற்றும்மீன்உற்பத்திகள் உட்பட சில உற்பத்திப் பொருள்களுக்கு ஐரோப்பிய நாடுகள் வரிவிலக்கு வழங்கும்.

## வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யகமாகக் கொண்டுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியுள்ளது.

இந்தக்கலந்தாய்வுச்செயலணியின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொள்ளாதுஎன்றுஉடனடியாக அறிவித்த இலங்கை அமைச்சர்கள் தொடர்பிலும் மனிதஉரிமைகள்கண்காணிப்பகம்தனது அதிருப்தியைவெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப்பிராந்தியப்பணிப்பாளர் பிரட் அடம்ஸ் கூறுகையில்–

"இடைக்காலநீதிதொடர்பாக பரந்துபட்ட கலந்தாய்வுகளை நடத்திய செயலணியின் பரிந்துரைகள் மீது உறுதியான நடவடிக்கையை இலங்கை அரசு எடுக்க வேண்டும். செயலணியின் முக்கியமான பரிந்துரைகளை இலங்கை அரசு கிடப்பில் போடக்கூடாது.

ஜெனீவா மனிதஉரிமைகள் பேரவையிலுள்ள நாடுகளுக்காக மட்டுமன்றி, போருக்குப் பின்னர் நீதியையும் நல்லிணக்கத்தையும் எதிர்பார்க்கின்ற தமது சொந்த மக்களுக்காக இலங்கை அரசு இந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்."– என்றார்.

## ரவிராஜ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதுமான வகையில் தெளிவுபடுத்தவில்லை என சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றிடம் கூறியுள்ளார்.

அத்துடன் வழக்கு விசாரணைகளை நள்ளிரவு வரை நடத்தியமையின் மூலம் முறைப்பாட்டாளர் தரப்புக்கு அநீதி ஏற்பட்டுள்ளது எனவும் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் சுட்டுக்கொலைசெய்யப்பட்டசம்பவம் தொடர்பான வழக்கின் தீர்ப்பு கடந்த டிசெம்பர் 24ஆம் திகதி அதிகாலையில் வழங்கப்பட்டது. இதில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த 5 பேர் குற்றச்சாட்டுகளில் இருந்து முற்றாகவிடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கின் தீர்ப்புக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட தரப்பான – ரவிராஜின் மனைவியின் சார்பில் – மேன்முறையீடு செய்யப்பட்டிருக்கின்றமை தெரிந்ததே.

# யாழில் நல்லிணக்க வாரம்

இன, மத, மொழி மற்றும் பிரதேசம் தொடர்பான பல்வகைத் தன்மைக்கு மதிப்பளித்து நாம் அனைவரும் இலங்கையர்என்றரீதியில்நல்லிணக்க வாரப்பிரகடனத்தைமேற்கொள்வோம் என்று யாழ். அரச அதிபர் என். வேதநாயகன் யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க வாரத்தைப் பிரகடனப்படுத்தும் தேசிய வேலைத் திட்டத்தின் ஆரம்ப நாள் நிகழ்வில் உரையாற்றும்போது கூறினார்.

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சால் கடந்த 8 ஆம் திகதியில் இருந்து 14 நாள்கள் நல்லிணக்க வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த நல்லிணக்கவாரத்தைப் பிரகடனப்படுத்தும் வகையில் யாழ்.மாவட்டசெயலகத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளப்பட்டு நல்லிணக்க வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதாக உறுதி மொழியும் எடுக்கப்பட்டது.

உ
சிவமயம்

ஆத்மசாந்திப் பிரார்த்தனை வைபவம் அழைப்பு



தவப்பேறு
12.12.1926

சிவப்பேறு
14.12.2016

அமரர் திருமதி சரஸ்வதி ஆறுமுகம் அவர்கள்
(இளைப்பாறிய உப அதிபர்,யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)

எங்கள் குடும்பத்தின் விருட்சமாக விளங்கிய அன்னையின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை வைபவத்திலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்ச்சியிலும் கலந்து சிறப்பிக்குமாறு மிகவும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம் :12.01.2017 வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணி
இடம்: ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபம், நல்லூர்.

246, 4/A கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.